# மாலைமதி

2-06-2003 ரூ 5.00 ஐந்து ரூபாய்



# சமர்ப்பணம் ஷோபனாவுக்கு!

பெ. நாயகி

# 1

சனிக்கிழமையின் மத்தியான சோம்பலில் டி.வி. பார்க்கலாமா அல்லது கதை எழுதலாமா என்கிற யோசனையில் இரண்டையுமே செய்யாமல் நேரத்தை வீணடித்துக் கொண்டிருந்தேன். என் சோம்பலின் அழுத்தம் தாங்காமல் மெத்தையும் தலையணையும் பிதுங்கிக் கொண்டிருந்தன. கண்கள் மூடியிருந் தாலும் மண்டைக்குள் பாதி பாதியாக நிற்கும் நான்கைந்து கதைகளின் பாத்திரங்கள் 'அடுத்து நாங்கள் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டுத் தொந்தரவு செய்து கொண்டிருந்தனர்.


அடடா! பத்து நூறு சிறுகதைகள் எழுதுவதற்குள் இந்தப் பாடா? அங்கே சென்னையில் தமிழ்நாட்டில் ஆளாளுக்கு ஆயிரம் நாவல்கள் எழுதித் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்! அவர்கள் மத்தியில் அங்கிருந்து ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் தொலைவில் வடக்கு குஜராத்தின் வறண்ட மணற்பாங்குப் பிரதேசத்தில் இருந்து கொண்டு இவ்வளவு சோம்பலும் அலட்சியமும் உள்ள



நான் என்றைக்கு எழுதி பெரிய ஆள் ஆகி—

ஆனால் ஷோபனா மேடம் என்னடாவென்றால் கட்டாயம் நான் அங்கிகாரம் பெற்ற எழுத்தாளனாக ஆகிவிடுவேன் என்று கட்டியம் கூறியபடி இருக்கிறாள்! எனக்குக் கதை எழுதும்

பெ. நாயகி



# சமர்ப்பணம் ஷோபனாவுக்கு!

ஆர்வம் ஒரு காலத்தில் இருந்தது என்று அவளிடம் கூறியது தவறோ! இப்போது நானே விட நினைத்தாலும் விட முடியாதபடி இந்த அவஸ்தை!

எரிச்சலாக இருந்தது; சுகமான எரிச்சல்!

அழைப்புமணி அடித்து கவனம் கலைத்தது.

எழுந்து போய்த் திறக்க, வாசலில் கூரியர் பையன்.

பெரிய கவர் ஒன்றினை நீட்டினான்.

எனக்குள் பனியனுக்குள் யாரோ ஐஸ்க்ரீம் கொட்டியது போல் ஜிவ்வென்றது.

கவரின் அனுப்புநர் முகவரி 'செல்வி பதிப்பகம், சென்னை' என்றது.

அவசரமாக வாங்கி அவன் நீட்டிய காகிதத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டுத் திரும்ப, "கொஞ்சம் தண்ணி கிடைக்குமா சாப்? ஏதோ சந்தோஷ சமாசாரம்னு நினைக்கிறேன். சாப் ரொம்ப குஷி மூடில் இருக்கறாப்ல தோணுது" என்றான் அவன் இந்தி-குஜராத்தி கலவை மொழியில்.

அவனிடம் பத்து ரூபாயை எடுத்து நீட்டினேன். "தண்ணி எதுக்கு? கூல் டிரிங்க் ஏதாவது வாங்கிக் குடிச்சிட்டுப் போ" என்று கதவைச் சார்த்திவிட்டு கவரினைப் பிரித்தேன்.

அச்சினால் நிரம்பி இருந்த காகிதங்கள். அழகான ஒரு வண்ண ஓவியம். கூடவே ஒரு கடிதம்.

'அன்புடையீர்!

தங்களுடைய சிறுகதைத் தொகுப்பின் பிழைதிருத்தப்பட்ட ப்ரூஃப் இத்துடன் தங்களுடைய பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தாங்கள் ஒருமுறை பார்த்து விட்டு ஏதாவது பிழைகள் இருந்தால் அவற்றைப் பென்சிலால் திருத்தி, இணைக்கப்பட்டுள்ள அட்டைப் படத்தில் மாறுதல்கள் எதேனும் செய்ய வேண்டி இருந்தால் அதனையும் குறிப்பிட்டு. முன்னுரை ஒன்றும் எழுதி அனுப்ப கேட்டுக் கொள்கிறோம்.

அன்புடன்

நடராஜன்,

செல்வி பதிப்பகத்திற்காக.'

சிலிர்த்தது.

படத்தில் கடற்கரைப் பின்னணியில் காதலன்-காதலி அமர்ந்திருந்த ஓவியம் மென்மையான வண்ணங்களில் இருந்தது. காதலி கையில் ஒரு கவிதையும், காதலனின் கையில் வேர்க்கடலைப் பொட்டலமும் அந்தக் கதையின் பின்

புலத்தை வாசகர்களுக்குக் கோடிட்டுக் காட்டப் போதுமானவை என்று பட்டது.

'மயான ரோஜா' என்கிற புத்தகத்தின் தலைப்பும் என் பெயரும் அழகுற எழுதப்பட்டிருந்தன.

அதனை முகத்துக்கு அருகில் வைத்துப் பார்த்தேன். சற்றுத் தள்ளி தொலைவில் வைத்துப் பார்த்தேன். ஒரு புத்தகக் கடையின் முன் நூற்றுக் கணக்கில் மயான ரோஜா புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதாகக் கற்பனை செய்து பார்த்தேன். நூலகத்தின் அடுக்குகளில் என் புத்தகம் பைண்ட் செய்யப்பட்டு கொஞ்சம் நைந்து போய் இருப்பதும், அதனை எடுத்துப் பிரிக்கும் ஒருவன் கண்களில் 'இதனை எழுதியவன் முட்டாள்' என்கிற ஒரு வாசகனின் குறும்பு கமெண்ட்டும், அதன் கீழே 'இப்படி எழுதியவன் மடையன்; அருமையான நூல்' என்கிற இன்னொரு கமெண்ட்டும் படுவதாக என் கற்பனையில் வந்து இதழ்க்கோடியில் புன்னகையை வெளித் தள்ளின.

சந்தோஷமாக நிமிர்ந்தேன். எதிரே மேசை மீது அம்மாவும் அப்பாவும் ஜோடியாக என்னைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்த புகைப்படத்தை எடுத்து முத்தமிட்டேன். 'அம்மா, அப்பா, சந்தோஷமா?' என்று கேட்டேன். இரவு போன் செய்து பேச வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

அடுத்த கணமே ஞாபகத்தில் வந்து நின்றது. ஷோபனா மேடம்!

அடடா! அவளுக்குத்தான் முதலில் நன்றி சொல்ல வேண்டும். இந்தச் சாதனையின் நாயகியே அவள்தானே! மூன்று வருடங்களுக்கு முன் நினைத்திருப்பேனா இப்படி ஒரு தொகுப்பு வெளியாகும் நாளும் வரும் என்று!

எழுதுவது என்பதையே மறந்து போயிருந்த என்னை எழுத வைப்பதற் கென்றேதான் வந்தாளோ உத்தரப்பிரதேசத்திலிருந்து?

இந்தப் பெருமையின் முழுப்பங்கும் அவளுக்குத்தான் சேர வேண்டும்!

நல்லவேளை இந்த கவர் இன்றே வந்துவிட்டது. நாளைக் காலையில் அவளும் சதீஷும் சென்னைக்குப் போகிறார்கள்.

போனை எடுத்து நம்பர் சுழற்ற சதீஷ்தான் எடுத்தான்.

"மேடத்திடம் கொடு" என்றேன் பரபரப்பாக.

"க்யா பாய்! ரொம்பவும் எக்ஸைட்டா பேசற? விஷயத்தைச் சொல்" என்றான்.

"உனக்கு அப்புறம்தான். முதலில் மேடத்திடம்தான்" என்றேன்.

ஷோபானாவின் குரல் கேட்டு, "மேடம்! நான் சந்தோஷத்தின் உச்சத்தில் இருக்கிறேன். அதுக்கு நீங்கதான் முதல் காரணம். இன்னிக்கு நைட் டின்னர் எங்க வச்சுக்கலாம், சொல்லுங்க. 'ஃபன் அண்ட் ஃபுட்' அல்லது 'கோகுல்

காம்டெ' நீங்க எதை செலக்ட் பண்ணினாலும் ஓகே" என்றேன் பரபரப்பாக.

"இஸி! இஸி" என்றாள் ஷோபனா வழக்கமான - மென்மையான குரலில்.

"விஷயத்தை முதலில் சொல் பையா" என்றாள். பையா என்றால் இந்தியில் சகோதரா என்று அர்த்தம்.

சொன்னேன். "வெரிகுட். வாழ்த்துக்கள். இதில் என் பங்கு என்ன இருக்குன்னு தெரியலை" என்றாள் மென்மையாக.

நான் "நோ நோ மேடம்..." என்று தொடரும் முன், "சரி, சரி, உன்னுடைய புகழ்மொழிகளைக் கேட்டுக் கேட்டு எனக்கு போர் அடித்துவிட்டது. உன் சந்தோஷத்தை எங்களுடன் பகிர்ந்துகொள்ள நினைக்கிறாய் என்கிற அர்த்தத்தில் இன்றைய டின்னருக்கு நான் ரெடி. சதீஷிடம் சொல்லி விடுகிறேன். நம்மடைய இந்த இலக்கியத் தொடர்பான சந்தோஷங்களின் முதல் விதை ஊன்றப்பட்ட இடம் 'ஃபன் அண்ட் ஃபுட்'தான் என்பதால் என்னுடைய சாய்ஸ் அதுதான்."

"டன். நான் ஏழு மணிக்கெல்லாம் கார் எடுத்துக் கொண்டு உங்க வீட்டுக்கு வந்திடறேன். தயாரா இருங்க" என்று தொலைபேசியை வைத்தேன்.

குஜராத்தில் சாதாரண நாட்களிலேயே இருள் வர ஏழுரை ஆகிவிடும். இப்போது கோடையின் பிற்பகுதி என்பதால் எட்டு மணிக்கு முன் இருட்டுவதில்லை. அதன்பிறகு கிளம்பலாம் என்று சதீஷ் சொல்லிவிட்டதால் அவனுடைய வீட்டிலேயே டீ குடித்தபடி அரட்டை அடித்துக் கொண்டிருந்தோம்.

சதீஷ் வாழ்த்து சொன்னான். நான் காட்டிய ப்ரூஃப் காகிதங்களைப் பார்த்தாள் ஷோபனா. "இதனைத் திருத்தி அனுப்பி எத்தனை நாளில் புத்தக வடிவில் வரும்?" என்று கேட்டாள்.

"தெரியலை மேடம். இது எனக்குப் புதிய அனுபவம்தானே? இந்தத் தொகுப்பினை இந்த பப்ளிஷருக்கு நான் அனுப்பியே ஆறு மாதங்களாகி விட்டது. இந்தத் தொகுப்பில் இருக்கும் எல்லாமே பிரபல பத்திரிகைகளில் வெளிவந்தவைங்கற தெம்பும், அவற்றில் ஆறேழு கதைகள், இலக்கியச் சிந்தனை, இலக்கிய வீதிங்கற நல்ல அமைப்புகளால சிறந்த கதைகள்னு தேர்ந்தெடுக்கப்பட்டவைங்கற நம்பிக்கையும் தான் இப்படி அனுப்புற தைரியத்தைக் கொடுத்தது. ரொம்ப நாளாயிட்டதால, புத்தகமாப் போட அவங்க செலக்ட் பண்ணலைன்னு நினைச்சிருந்தேன். இப்போ வந்திருப்பது சந்தோஷமா இருக்கு."

"அதான் உன் முகத்திலேயே தெரியுதே. இதில் எதுவும் எனக்குப் புரியப் போவதில்லை. உங்க மொழில இருக்கு. ஆனா இந்த அச்சில் இருக்கிறது எல்லாம் என் பையா எழுதியது என்கிற அளவில் சந்தோஷமாக உணர முடிகிறது" என்றாள் ஷோபனா.

அட்டைப் படத்தினை எடுத்துப் பார்த்துவிட்டு "அழகாக இருக்கிறது. தமிழில் நல்ல ஓவியர்கள் இருக்கிறார்கள் என்று தெரிகிறது'' என்றாள். "பையா! இதில் இதுதானே உன் பெயர்?'' என்று காட்டிக் கேட்டாள்.

"சரியாச் சொல்லிட்டீங்க. தமிழ் படிக்க வருதா?" என்றேன்.

''இல்லை. நீ அவ்வப்போது பத்திரிகைகளில் உன் கதை வந்திருக்கிறதா இங்கே கொண்டு வந்து காட்டுவியே, அதில் உன் பெயரைப் பார்த்துப் பார்த்து பதிந்துவிட்டது. தமிழில் உன் பெயர் எப்படி இருக்கும் என்று. வெரிகுட் பையா. உன் ஆசைப்படி, தமிழ் இலக்கிய உலகத்தில் நீ கால் பதிச்சிட்ட"

''அதுக்கு முழுக் காரணமும் நீங்கதானே மேடம்?'' என்றேன், நிஜமான நன்றி உணர்வு கொப்பளிக்க. "இது என்னுடைய வெற்றி என்பதை விடவும், நீங்க ஒரு சைக்காலஜி கௌன்ஸலரா ஜெயிச்சிருக்கீங்கன்னுதானே சொல்லணும்?"

ஷோபனாவின் முகம் பெருமையில் சிவந்தது. அவள் பதில் சொல்லும் முன், "நீ ரொம்பவும்தான் இவளை ஏத்தி விடற, அவள் தலைகால் புரியாமல் ஆடறா" என்று சீண்டினான் சதீஷ்.

"போடா, உனக்குப் பொறாமை" என்றேன். "சரி, அந்தப் பேச்சினை விடு. நீங்க சென்னை போக எல்லாம் தயாரா எடுத்து வச்சாச்சா?" என்று பேச்சினை மாற்றினேன்.

''ம். அங்கே பார்த்து வரச்




## வெள்ளை தழும்புகள்

எமது சிகிச்சை ஆரம்பித்த 20 மணி நேரத்தில் தழும்பின் நிறம் மாறத் தொடங்கி தோலின் அசல் நிறத்தை அடைந்துவிடுகிறது. உங்களது வியாதியின் முழு விவரத்தையும் எழுதி 1 பாக்கெட் மருந்தை இலவசமாக கேட்டுப் பெறுங்கள்.

### ரகசிய நோய் மருந்து இலவசம்

எமது மருந்து உபயோகித்தால் நித்திரையில் ஸ்கலிதம், சிறுநீர், மலம் கழிப்பதற்கு முன், பின் சக்தி வீணாதல், சிறுநீர் சம்பந்த நோய், சீக்கிர ஸ்கலனம், வீரியமின்மை, ஆண்குறி குறைபாடுகள். உயிர் அணுகுறை, கணோரிய ஸிபிலிஸ் போன்ற நோய் அடியோடு அழிக்கப்பட்டு நிரந்தரமாக குணமாகிவிடும். உடலில் ஒப்பற்ற சக்தி ஓட்டம் பெற்று பாலுணர்ச்சியில் முன்னேற்றம் காணப்படும். ஆயிரக்கணக்காணோர் பயனடைந்ததாகும். டெஸ்ட் செய்து பார்க்க 15 நாட்களுக்கான மருந்து இலவசம் தரப்படுகிறது. நோய் விவரம் வயதுடன் எழுதவும்.

### தலை முடிகள் நரைத்தல், உதிர்தல் மற்றும் வழுக்கைக்கு மருந்து இலவசம்

எமது ஆயூர்வேத மருந்தால் தலைமுடி உதிர்தல், நரைத்தல், செம்பட்டையாதல், வழுக்கை, பொடுகு உதிர்தல், நமைச்சல் முதலான குறைபாடுகளை அடியோடு அழிக்கப்பட்டு முடிகளை இயற்கை கருமையாக அடர்த்தியாக இனி உதிராமல் உறுதியுடன் கூடி பூபோன்று மென்மையாக அழகாக மாறிவிடும். மேலும் ஞாபக சக்தி கூடி மூளையையும், கண்களையும் குளிர்ச்சியுடன் வைத்திருக்கும். எமது மருந்தால் ரியாக்ஷனோ சைடு எஃபெக்டோ ஏற்படாது. இம்மருந்தை முதலில் சோதித்து பார்க்க 15 நாட்களுக்கானது இலவசம் தரப்படுகின்றது. இதை பெற ஆணா? பெண்ணா மற்றும் வயதுடன் கூடி எழுதவும்.

Add: **VAIDYA SURENDRA PRASAD GUPTA**
P.O. KATRI SARAI (GAYA),
Ph:06112289340

Advt

சொல்லி நீ தந்திருக்கும் பயணப் பட்டியலையும் என் பர்ஸிலிருந்து கரையப் போகும் பணத்தையும் நினைத்தால்தான் கொஞ்சம் கவலை. இவளும் கூடவே வருகிறாள் என்கிற விஷயம் இன்னும் பயப்படுத்துகிறது."

ஷோபனா அவனைச் செல்லமாக முறைத்தாள்.

"கஞ்ஜூஸ், மக்சிக்சூஸ்... பையா, இப்படிப்பட்டவனுடன் எப்படி நீ நட்பு வைக்க முடிந்தது?"

"கல்யாணத்துக்கு முன்னால் இவன் தாராளமாகத் தான் இருந்தான் மேடம். இப்போதான் இப்படி மாறிட்டான்."

"அதாவது இவள் வந்தப்புறம்தான் பைசாவுக்கெல்லாம் கணக்குப் பார்க்க ஆரம்பித்துவிட்டேன். சரியா?" என்று கேட்டான் சதீஷ்.

பேச்சினை விபரீதமாகத் திசை திருப்புகிறான் என்பது புரிய, புன்னகையுடன் மௌனமானேன்.

"பயப்படாமல் சொல்லுடா ஆமாம்னு. இப்போ புரியுதா என்னைக் கெடுத்தது யார்னு?"

"ரெண்டு பேரும் சேர்ந்து என்னைக் கலாய்க்கிறீங்களா? உங்களுக்கெல்லாம் ஒரு உண்மை தெரியுமா? எல்லா ஆம்பளைங்களும் தங்களுடைய அசிங்கமான சுயரூபத்தை பிரம்மச்சர்ய காலத்தில் மறைத்து வேஷங்கட்டி இருப்பாங்க. மனைவி வந்தப்புறம் அது எல்லாத்தையும் வெளிப்படுத்தறதுதான் உங்க நேச்சர். தங்களைப் பற்றிய சிந்தனை, விமரிசனங்களைக் கூட நேரா ஃபேஸ் பண்ண ஆம்பளைங்களுக்குத் தைரியம் கிடையாது. அதுக்குக் கூட மனைவிங்கற கேடயம் தேவைப்படுதுங்கறதுதான் உண்மை."

சதீஷ் கையெடுத்துக் கும்பிட்டான்.

"தாயே! உன் மனோதத்துவ அறிவையும் லெக்சரையும் இப்போ ஆரம்பிச்சுடாதே"

ஷோபனா சிரித்தாள்.

"கிளம்பலாமா?" என்று எழுந்தேன்.

## 2

அகமதாபாத் விமான நிலையத்துக்குச் சென்று சதீஷையும் ஷோபனாவையும் சென்னை விமானத்தில் வழியனுப்பி விட்டுத் திரும்பி வர, மேசை மீதிருந்த சிறுகதைத் தொகுப்பின் பிழைதிருத்தப் பிரதி ஷோபனாவைப்

பற்றிய சிந்தனைகளைக் கிளப்பிவிட்டது என்னுள்.

எப்பேர்ப்பட்ட ஒரு மௌனப் புயல் அவள்!

இன்றைக்குச் சரியாக மூன்று ஆண்டுகளுக்கு முன் நான் கற்பனையிலாவது கண்டிருந்தேனா இப்படி ஓரளவு அங்கீகாரம் பெற்ற எழுத்தாளனாக வளருவேன் என்று?

வித்தைக்காரன் காலித் தொப்பிக்குள் இருந்து மிட்டாய், கர்ச்சீஃப், மாம்பழம், சோப்பு டப்பா, புத்தகம், முயல் குட்டி என்று ஒவ்வொன்றாய் எடுப்பது போல் எனக்குள்ளிருந்து எவ்வளவு விஷயங்களை வெளிக் கொணர்ந்து விட்டாள்! இத்தனை சிறுகதைகளும் கவிதைகளும் என்னுள் ஓரமாக ஒடுங்கிக் கிடந்தன என்பது எனக்கே தெரியாமல்தானே இருந்தது!

எல்லாவற்றிற்கும் மேலாக காவ்யாவைப் பற்றி இவ்வளவு பேச வைத்து விட்டாளே! எனக்குள் அப்படி என்ன மாற்றத்தை உண்டாக்கினாள், நான் இவளிடம் வலியப் போய் காவ்யா குறித்து அவ்வளவு சொல்லும் வண்ணம்?

ஆழ்ந்து யோசித்தால் ஷோபனா அதிர்ந்து பேசும் ரகமல்ல; எதையும் அதட்டிக் கேட்கும் பெண்ணும் அல்ல. மென்மையான சிறிய வார்த்தைகளையே எப்பேர்ப்பட்ட இதயப் பூட்டுக்களையும் தகர்த்து நொறுக்கும் மாயச் சாவியாகப் பயன்படுத்துகிறாள்! இவளுடைய திறமைகளை உணர்ந்து ஊக்குவிக்க மாட்டேனென்கிறானே இந்த சதீஷ் என்ற எண்ண, அவள் மீது கொஞ்சம் இரக்கம் கூட வந்தது.

சதீஷுக்கு உளவியல் பற்றிய பேச்சுக்கள் என்றாலே கற்பனையான பொழுது போக்குப் பேச்சு என்கிற அளவுக்கு அலட்சியம். அதனை அடிக்கடி இளக்காரமாகச் சொல்லியே ஷோபானவை உற்சாகம் இழக்க வைத்த வண்ணம் இருப்பான். எனக்கு அந்த சப்ஜெக்ட் மிகவும் பிடித்தமான ஒன்று என்பதாலேயே அதுபற்றி நேரம் கிடைக்கும்போதெல்லாம் சதீஷின் கேலியையும் மீறி ஷோபானாவிடம் விவாதித்த வண்ணம் இருப்பேன்.

வீடு வெறிச்சென்று இருக்க, ஒரு மாதிரியான வெறுமை உணர்வு ஆட்கொண்டது.

இவர்கள் எப்போது வெளியூர் போனாலும், விடுமுறைக்குச் சொந்த ஊர் போனாலும் இப்படித்தான் ஆகி விடுகிறது. நான் ஊருக்குப் போகின்ற காலங்களிலும் இப்படி ஆவதை அவர்களும் என்னிடம் சொல்வார்கள். இதனாலேயே வருடாந்தர விடுமுறையை கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் எடுத்துக் கொண்டு இருவரும் அவரவர் ஊர்களுக்குச் சென்று வரும் அளவிற்கு எங்களுக்குள் கடந்து ஆறு வருட நெருக்கம்.

சென்னைப் பிராந்தியத்தில் இருக்கும் எங்கள் கம்பெனியின் பயிற்சிப் பள்ளியில் ஒரு வாரம் நடைபெற இருக்கும் இந்த டிரெயினிங் கூட நானும்

சதீஷும் போவதாகத் தான் திட்டம் போட்டு விண்ணப்பங்கள் கொடுத்தோம். கடந்த மூன்று ஆண்டுகளாக ஷோபனா சொல்லிக் கொண்டிருந்தாள் சென்னையைப் பார்க்க வேண்டும் என்று. நானும் உடன் இருந்தால் சுற்றுவது எளிதாக இருக்கும் என்று திட்டம் போட்டிருந்தோம். ஆனால் கடைசி நிமிடத்தில் எனக்கு இங்கே முக்கியமான டைரக்டர் விசிட் சம்பந்தமான வேலை வந்து விட, என்னுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு அவனுடையது மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.'

நான் இல்லாமல் போக அவர்கள் முதலில் தயங்கினாலும் நான்தான் ஊக்கம் அளித்து சென்னையில் தினமும் மாலையில் பார்க்க வேண்டிய இடங்கள் குறித்த விளக்கங்கள் எல்லாவற்றுடனும் பயணத் திட்டம் தயாரித்துக் கொடுத்திருந்தேன். வாரக் கடைசியில் கொஞ்சம் தெற்கே போக மூடு இருந்ததென்றால் திருவண்ணாமலை (ஷோபனாவுக்கு பகவான் ரமணர் மீது ஈடுபாடு இருந்ததால்), சிதம்பரம் என்று கொஞ்சம் நீட்டிப்பு திட்டங்களும் கொடுத்திருந்தேன். பார்க்கலாம் எந்தெந்த இடங்கள் பார்த்து வருகிறார்கள் என்று.

96-ம் வருடம் நானும் சதீஷ்குமார் திவேதியும் ஒரே நேரத்தில் இந்த கம்பெனியின் வடக்கு குஜராத் மெஸானா ப்ராஜெக்ட்டில் வேலையில் சேர்ந்தவர்கள். அந்த பேட்சில் சேர்ந்த பத்துப் பேரில் எல்லோருக்கும் எல்லோருடனும் அலுவல்பூர்வ தொடர்பு நன்றாகவே இருந்தாலும் எனக்கும் அவனுக்கும் இடையில்தான் நட்பு ஏற்பட்டது. அவன் உத்தரப்பிரதேசத்தின் மையத்திலிருந்தும் நான் தமிழ்நாட்டின் காரைக்காலில் இருந்தும் அங்கே மையம் கொண்டிருந்தோம். முதலில் கம்பெனி குடியிருப்பில் இடம் இல்லாத காரணத்தால் ஊருக்குள்தான் வீடு தேடி அலைய வேண்டி இருந்தது. இந்தி தெரியாத என்னால் ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு அங்கே எதையும் சாதிக்க முடியவில்லை. குஜராத் மக்கள் 'ஆங்கிலேயர்கள் இன்னுமா இந்த நாட்டினை விட்டுப் போகவில்லை?' என்பதுபோல் முறைத்தார்கள். இந்தி அல்லது குஜராத்தி தெரியாவிட்டால் அங்கே காலம் தள்ளுவது சிரமம் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. நம்மூர் அரசியல்வாதிகளைத் திட்டிக் கொண்டே சதீஷுடன் ஒட்டிக்கொண்டேன்.

அவன் பார்த்த வீட்டில் நாங்கள் இருவரும் குடிபோனோம்.

குஜராத் ஓட்டல்களின் சாப்பாடு அவனுக்கும் பிடிக்கவில்லை, எனக்கும் பிடிக்கவில்லை.

குறைந்தபட்ச சாமான்களை வாங்கிக் கொண்டு சமைப்பது என்று முடிவு செய்தோம். அவனைவிட எனக்கு நன்றாகவே சமையல் தெரியும் என்றாலும், நம்மூர் சாம்பார், ரசம், புளிக்குழம்பு ஆகியவை அவனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. எனவே கோதுமை சார்ந்த ஐட்டங்களை அவன் சமைப்பது என்றும் அரிசி சார்ந்த விஷயங்கள் என் பொறுப்பு என்றும் இலாகா பிரித்துக்

கொண்டோம்.

இருவருக்கும் பொதுவாக இருந்த படிக்கும் பழக்கம் எங்களை உள்ளூர் நூலகம் தேடி உறுப்பினராக்க வைத்தது. நிறைய நல்ல நல்ல ஆங்கிலப் புத்தகங்கள் அங்கே கிடைத்தன. பழைய சமஸ்தான ராஜா ஒருவர் பொக்கிஷமாகப் பாதுகாத்து வைத்திருந்த நூல்களை அப்படியே கட்டடத்துடன் நூலகமாக நன்கொடை தந்து இறந்தார் என்றார்கள்.

நான் படிக்கும் விஷயங்களை அவனுடனும் அவன் படிக்கும் விஷயங்களை என்னுடனும் கலந்துகொள்ள முடிந்தது. இரவுகளில் நீண்ட நேரம் மனம் திறந்த விவாதங்களில் ஈடுபட முடிந்தது. "இந்தி சீக்கிரம் வாய் வர வேண்டுமென்றால் புரிந்தாலும், புரியவிட்டாலும் நிறைய இந்தி சினிமாக்களையும் தொலைக்காட்சியின் இந்தி சீரியல்களையும் பார்" என்ற அவனுடைய அறிவுரைப்படி நான் தொடர்ந்து பார்த்து அவனிடம் அர்த்தம் கேட்டுக் கேட்டு வார்த்தைகளும் வாக்கியங்களும் ஒரே ஆண்டுக்குள் நன்றாகவே பழகிவிட்டன.

சதீஷ் உத்தரப்பிரதேசக்காரன் என்பதால் அவன் எனக்குக் கற்பித்த இந்தி கலப்படமில்லாத வார்த்தைகளுடன் இருந்தது என்பதோடு சீரியல்களில் இருந்து பழகாமல் இலக்கண சுத்தமாகவும் என்னால் பேச முடிந்தது. அவனுடைய பழக்கத்தால் உச்சரிப்பு சுத்தமும் கைகூடி வந்தது. சுத்தத் தமிழ் பேசுவோருக்குத் தமிழ்நாட்டில் கிடைக்கும் அவமதிப்பு போலன்றி வடநாட்டில் அலுவலகத்திலும் மற்றவர்கள் மத்தியிலும் நான் பேசிய நல்ல இந்தி மரியாதை பெற்றுத் தந்தது.

எங்கள் நட்பு அடுத்த இரண்டு ஆண்டுகளில் இறுகியிருக்க, சதீஷுக்குத் திருமண ஏற்பாடு நடந்தன.

அவ்வப்போது தன்னுடைய சொந்த ஊருக்கு விடுப்புகள் எடுத்துக்கொண்டு போய் வந்து இருந்தான்.

ஒருமுறை திரும்பி வந்து ஒரு புகைப்படத்தைக் காட்டினான்.

அமைதி, அடக்கம், குடும்பப் பாங்கு ஆகியவற்றின் மொத்த உருவமாக மெல்லிய புன்னகையுடன் இருந்த அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் எனக்குள் ஊறிக் கிளிர்ந்த சகோதர உணர்வினை எப்படி வார்த்தைகளில் வெளிப்படுத்துவது என்று தெரியவில்லை. "சதீஷ்! இவங்க தான் உனக்குப் பொருத்தம்னு தோணுதுடா" என்றேன்.

சதீஷ் வெட்கம் கலந்து புன்னகைத்தான். "இந்தப் பொண்ணோடதான் உறுதி ஆகியிருக்குடா" என்றான். "ஆனா படிக்கிறாளாம். ஏப்ரலில் அதை முடித்த பிறகு தான் கல்யாணம்னு உறுதியா சொல்லிட்டா" என்றான் லேசான ஏமாற்றத்துடன்.

"நீ பார்த்துப் பேசினியா?"

"ம்"

நான் ஏப்ரலுக்கு இன்னும் எவ்வளவு காலம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

"அப்படி என்ன படிப்பு?"

"அதுவும் உன்னை மாதிரி மெண்ட்டல் கேஸ்தான். சைக்காலஜில முதுகலை"

விசிலடித்தேன். "வாவ்! நம்ம சப்ஜெக்ட்" என்றேன். எனக்கும் உளவியல் மிகவும் பிடிக்கும். பொறியியல் படிக்கும்போது பின்னாளில் வேலை கிடைத்து செட்டில் ஆன பிறகு தபால் மூலமாவாவது உளவியல் படிக்க வேண்டும் என்று நினைத்தது உண்டு. இன்றும் கூட நூலகத்தில் சதீஷ் ஆங்கில நாவல்கள் எடுத்தால் நான் எடுத்துப் படிக்கும் புத்தகங்கள் அந்தத்துறை சார்ந்த புத்தகங்கள் தான். பிஹேவியரல் சயின்ஸ் எனப்படும் மனித இயல்புகள் குறித்த அறிவியலில் எனக்கு அப்படி ஒரு நாட்டம்.

அன்று இரவு வீட்டில் சமைக்க மனமில்லாமல் ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அவனுடைய இருப்பு அங்கேயே இல்லை என்பது முகத்திலேயே தெரிந்தது. ஏப்ரல் வரை இப்படித்தான் இருக்கப் போகிறான். அதுவரை அடிக்கடி அந்தப் பெண்ணைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தால் சந்தோஷப்படுவான்.

"அவங்களைப் பற்றிய மற்ற விவரங்கள் நீ சொல்லவே இல்லையே" என்று கேட்டேன்.

"எவங்க?"

"ஏய்... இந்த டிராமாதானே வேணாம்ங்கறது"

அசட்டுத்தனமாகப் புன்னகைத்தான்.

"பெயர் ஷோபனா" என்றான்.

"வெல்"

நகத்தைக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தான்.

"ஏண்டா டென்ஷனா இருக்கற?" என்று கேட்டான்.

"அதிகம் படிச்ச பொண்ணா வேணாம்னு சொல்லி இருந்தேன். எனக்குத் தேவை வீட்டையும் என்னையும் நல்லா பார்த்துக்கற மாதிரியான பொண்ணுதான். இது பி.ஜி. சைக்காலஜின்னும் போது மிரட்டலா இருக்கு. அதோட, கல்யாணத்துக்கு முன்னாலேயே படிப்பு முடிஞ்சப்புறம்தான் கல்யாணப்

பேச்சுங்கற அளவுக்கு உறுதியா இருக்கறதைப் பார்த்தா... உனக்குத் தான் நியூமராலஜியில் நல்ல அறிவு உண்டே.... நீ சொல்லுடா, அவள் எப்படி இருப்பா? என் நேச்சருக்கு ஒத்துப்போய் இருப்பாளா?" என்றான் சதீஷ்.

"அவங்க கரெக்ட் பிறந்த நாளினைச் சொல்லு" என்று கேட்டேன். சதீஷுடையது எனக்கே தெரியும்.

எனக்குத் தெரிந்த அரைகுறை எண்கணித அறிவே அவர்கள் 'மேட் ஃபார் ஈச் அதர்' என்று சொன்னது.

"இவங்கதாண்டா உனக்குப் பொருத்தமா இருப்பாங்க. டென்ஷன் இல்லாமல் இரு" என்றேன்.

ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாட்டில் பெரியப்பாவின் மரணம் என்னை அவனுடைய கல்யாணத்துக்கு அலிகார் போகவிடாமல் செய்துவிட்டது.

அவன் கல்யாணம் தொடர்பான சகல சடங்குகளும் விடுப்பும் முடிந்து ஜூன் மாதம் மெஸானாவின் வெயில் உச்சத்தில் இருந்த நாளில் திரும்பி வந்தான்.

அந்த இடைவெளியில் நாங்கள் கூட்டாக இருந்த வீட்டிற்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் பெரிய வீடாகப் பார்த்து சுத்தம் செய்து புதிதாக பெயிண்ட் செய்து அவன் அலிகாரில் இருந்து லாரியில் அனுப்பி வைத்திருந்த சீர்வரிசை, மேசை, ஃப்ரிட்ஜ், ஏஸி முதலான வீடு சார்ந்த ஐட்டங்களை எல்லாவற்றையும் இறக்கி குடிவரத்தக்க வீடாக ஆக்கி வைத்திருந்தேன். இடையிடையே நான்கைந்து முறை தொலைபேசியில் பேசிக்கொண்டோம். திருமணம் நல்லபடியாக நடந்ததாகவும் நான் கலந்து கொள்ளாதது மட்டும் தான் பெரிய குறையாகவும் இருந்ததாகச் சொன்னான். நான் சற்றும் எதிர்பார்க்காத வகையில் தொலைபேசியைத் தன் புது மனைவியிடம் கொடுத்து என்னிடம் பேச வைத்தான்.

"உங்களை நான் நேரில்தான் பார்க்கவில்லையே தவிர உங்களைப் பற்றித் தான் தினமும் பேசி இருக்கிறார். உங்களைப் பற்றிய ஒரு முழு சித்திரத்தையே என் மனதில் உருவாக்கி இருக்கிறார். அநேகமாக நாம் நேரில் பார்த்துக் கொள்ளும் போது புதிய அறிமுகமாக இருக்கப் போவதில்லை" என்றாள் அந்தப் பெண்.

"அதிருக்கட்டும், உங்க பரீட்சைகள் எப்படி இருந்தன? நல்லா செஞ்சிருக்கீங்களா? இளங்கலை படிக்கும் போது யுனிவர்ஸிட்டி கோல்ட் மெடலிஸ்ட்டுன்னு கேள்விப்பட்டேன். இப்போதும் வாங்கிடுவீங்களா?" என்று கேட்டேன்.

"ஓ. தாங்க் காட்! உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை. என்னுடைய படிப்பு பற்றிக் கேட்ட ஒரே ஆள் நீங்கதான். நிச்சயமா நீங்க

எனக்கு ஒரு வித்தியாசமான நண்பரா இருப்பீங்கன்னு இப்போதே தெரியுது" என்ற ஷோபனாவின் குரலில் நிஜமான நெகிழ்ச்சி.

மெஸானா ரயில் நிலையத்தில் அவர்கள் இருவரையும் வரவேற்கக் காரெடுத்துக் கொண்டு போயிருந்தேன்.

ஏஸி கோச்சில் இருந்து முதலில் இறங்கிய சதீஷ், தன் பின்னேயே இறங்கிய ஷோபனாவைக் காட்டி, "இதுதானப்பா என் பீவி" என்று புன்னகைத்தான்.

நிமிர்ந்து பார்த்துக் கும்பிட்டேன்.

என்னைப் பார்த்த ஷோபனாவின் கண்கள் சட்டென்று ஏதோ குழப்பத்தில் குளமாயின. "ஹரீஷ் பையா!" என்று முணுமுணுத்தது அவள் வாய். அதோடு சதீஷின் கைகளையும் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு கோழிக் குஞ்சாக ஒன்றினாள்.

நான் கேள்விக்குறியாக அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்க்க, "ஏய்! என்னாச்சு?" என்று கேட்டான் சதீஷ். "அவன் பெயர் ஹரீஷ் அல்ல. அவன்தான் நான் சொன்ன..." என்ற தொடரப் போனவனை "சாரி!" என்று இடைமறித்தாள்.

வீடு போய்ச் சேர்ந்ததும் என்னிடம் மன்னிப்புக் கேட்டாள் ஷோபனா.

"உங்களுக்கு நம்புவதற்குச் சிரமமாக இருக்கும். இந்தப் புகைப்படத்தைப் பாருங்கள்" என்று அவர்கள் கொண்டு வந்திருந்த கைப்பை ஒன்றிலிருந்து சிறிய ஆல்பம் ஒன்றினை எடுத்துப் பிரித்துக் காட்டினாள்.

அதில் கொஞ்சம் சின்ன வயது ஷோபனாவின் பக்கத்தில் கிட்டத்தட்ட என்னுடைய உயரம் மற்றும் உடலமைப்புடன் ஓர் இளைஞன். என்னை அச்சுரித்த மாதிரி என்றெல்லாம் சினிமா பாணியில் சொல்ல முடியாது என்றாலும் திடீரென்று பார்த்தால் நான்தானோ என்று தோன்றுவதற்கு ஓரளவு வாய்ப்புகள் இருக்கின்றன.

"இது..."

"என் பெரியப்பா பையன் ஹரீஷ். எனக்கு அண்ணன். சிறுவயது முதல் எனக்கான தோழன், வழிகாட்டி, குரு எல்லாமாக இருந்தவன். நான்கைந்து வருடங்களுக்கு முன் ஒரு ரயில் விபத்தில் இறந்து போனான். அந்த இழப்பு என்னால் இத்தனை வருடங்களாகியும் ஜீரணிக்க முடியாத ஒன்றாக அரித்துக் கொண்டிருக்கும் ஒரு விஷயம். அன்று உங்களுடன் போனில் பேசியபோதே உங்கள் குரலும் நீங்கள் பேசிய விதமும் அவனுடைய எண்ணத்தை என்னுள் கிளறிவிட்டிருந்தன. ஸ்டேஷனில் உங்களைப் பார்த்ததும் ஆடிப்போய் விட்டேன். முன் பின் தெரியாத ஒரு மாநிலத்திற்கு வாழ்க்கைப்பட்டுப் போகிறோமே என்கிற ஏக்கம் என்னுள் இருந்தது. இப்போது இதே ஊரில் என் அண்ணன் என் அருகில்தான் இருக்கிறான் என்பதே தெம்பைத் தருகிறது"

என்றாள் நெகிழ்ச்சியோடு.

எனக்குள் உருகி ஓடிய எண்ணங்களை என்னால் விவரிக்க முடியவில்லை.

கொஞ்ச நேர பேரமைதிக்குப் பிறகு, "சரி, இப்போது என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கலைத்தேன் இருவரையும்.

என் வீட்டில் இரவு உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். என் சமையலை மிகவும் புகழ்ந்தாள் ஷோபனா. அவளுக்கு தமிழ்நாட்டு வகை உணவுகள் பிடிக்க ஆரம்பித்தன.

# 3

இப்படித்தான் ஆரம்பமாகியது எங்கள் நட்பின் இறுக்கம். எனக்கு ஆட்சேபணை இல்லை என்பதைக் கேட்டுக்கொண்டு என்னை பையா, நீ - நான் என்றே அழைக்க ஆரம்பித்தாள் ஷோபனா. நான் அடிக்கடி மாலை வேலைகளில் சதீஷ் வீட்டுக்குப் போவதோ, அவர்கள் இருவரும் என் வீட்டுக்கு வருவதோ சாதாரண நிகழ்வானது.

எங்கள் மூவருக்குமே பொதுவான ஈடுபாடுகள் பல விஷயங்களில் இருந்தன. குறிப்பாக பாடல்கள், இசை, சினிமா போன்ற கலை சார்ந்த விஷயங்களில் ஷோபனாவுக்குக் கொஞ்சம் கூடுதலாக கஜல்.

ஒரு முறை என் வீட்டுக்கு அவர்கள் சாப்பிட வந்திருந்த போது டேப் ரெக்கார்டரில் 'தூ ஷாயர் ஹை; மை தேரி ஷாயரீ...' என்கிற இந்திப் பாடல் பாடிக் கொண்டிருந்தது. 'நீ கவிஞன்; நான்தான் உனது கவிதை' என்று அர்த்தம்.

"நல்ல பாட்டு இல்லையா? என்ன சூப்பரான வரிகள்!" என்று புகழ்ந்தாள் ஷோபனா.

"பாயும் ஒளி நீ எனக்கு; பார்க்கும் விழி நானுனக்கு. தோயும் மது நீ எனக்கு; தும்பியடி நானுனக்கு" என்று தமிழில் ஆரம்பித்து முப்பத்திரண்டு வரிகளையும் இந்தியில் அரைகுறையாக மொழி பெயர்த்துச் சொன்னேன். குறிப்பாக 'பண்ணு சுதி நீ எனக்கு; பாட்டினிமை நானுனக்கு. பேசு பொருள் நீ எனக்கு; பேணுமொழி நானுனக்கு' ஆகிய வரிகளைக் கொஞ்சம் அழுத்தமாகவே சொன்னேன்.

ஆடிப் போனாள் ஷோபனா. "வாவ்! வாவ்!" என்று வரிக்கு வரி ரசித்தாள்.

"அருமையான வரிகள்! யாருடையது? நீ எழுதியதா பையா?" என்று கேட்டாள் பிரமிப்புடன்.

"நானல்ல தாயே! எண்பது தொண்ணூறு வருஷங்களுக்கு முன்னாலேயே

எங்கள் ஊர் மகாகவி ஒருவன் எழுதிவிட்டான். பாரதியார் என்று பெயர்" என்றேன்.

"பாரதியார்! நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றான் சதீஷ்.

"உனக்கு உன் மொழியின் இலக்கியத்தில் நல்ல ஆர்வமும் எடுத்தாளும் ஞானமும் இருக்கின்றது. உனக்கும் எழுத வருமோ?" என்று அவள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்வதை அப்போது தவிர்க்கவே செய்தேன்.

அவர்களுடன் நான் பாரதியாரின் வரிகளையும், அவள் என்னுடன் ஜக்ஜீத் சிங்கின் கஜல் வரிகளையும் அவ்வப்போது பரிமாறிக் கொள்வது அப்போதிருந்து வழக்கமானது.

அலுவல் தொடர்பான மற்ற நண்பர்கள் தங்கள் மனைவியருடன் சதீஷ் வீட்டிற்குப் போய்ப் பழக முயன்றார்கள்.

பொதுவாகவே இந்த மாதிரி புது மனைவியுடன் வந்து இறங்குகின்றவர்களுக்கு முதல் இரண்டு மாதங்களுக்கு ஏக கிராக்கி இருக்கும். ஒருவர் மாற்றி ஒருவர் தங்கள் வீட்டிற்கு அழைப்பார்கள்; அல்லது பார்க்க வரும் சாக்கில் இந்த வீட்டிற்கு வருவார்கள். ஏனென்றால் எங்கள் அலுவலகத்தில் பலரும் வேறு மாநிலத்தவர்களே என்பதால் அவர்களுடைய மனைவியரும் தங்களைப் போன்ற நாடோடிக் கூட்ட மனைவியருடன் பழக ஆசைப்படுவார்கள். அந்த இரண்டு மாத விருந்துச் சுற்றில் புதுப் பெண்ணுக்கு எப்படியும் நான்கைந்து பேருடனாவது நட்பு இறுகிவிடும்.

ஆனால் இவர்கள் இருவருக்குமே என்னுடைய இருப்புதான் சந்தோஷம் அளித்தது. சதீஷுக்கும் எனக்குமாவது பழைய நெருக்கம் என்றாலும், ஷோபனாவுக்கு ஏனோ மற்ற பெண்களுடன் பெரிய அளவில் ஒட்டுதல் ஏற்படவில்லை. மாலை வேளைகளில் வெளிக் கிளம்பினால் "யார் வீட்டிற்கும் வேண்டாம். பையா வீட்டிற்கே போகலாம்" என்று சதீஷை என் வீட்டிற்கே அழைத்து வரத் தொடங்கினாள்.

"இல்லை மேடம், பெண்களுடைய நட்பு உங்களுக்கு அவசியம்: மற்றவர்கள் வீடுகளுக்கும் செல்லுங்கள்" என்று அறிவுறுத்திப் பார்த்தேன்.

"நீ சீக்கிரம் கல்யாணம் செய்துகொண்டு உங்க ஊரில் இருந்து பெண்ணைக் கூட்டி வா, அவங்களுடன் நட்பு வச்சுக்கறேன்" என்றாள்.

"அதைச் சொல்லு முதலில். ஆமா, உன் கல்யாணம் எப்போடா?" என்று கேட்டான் சதீஷ்.

வெறுமனே புன்னகைத்தேன். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்னு தமிழில் ஒரு பழமொழி சொல்வாங்க. அது மாதிரியா?"

"புரியலை"

“கல்யாணம்தானே, பண்ணிட்டா போச்சு, ஆனா இந்தி தெரிஞ்ச பொண்ணா பார்க்கணுமே. அப்போதானே மேடத்துக்கு கம்பெனி கிடைக்கும்?”

“ஆமா, நீ இங்கே வந்த போது பண்டிட் துளஸிதாசாத்தானே இந்தியில் பொளந்து கட்டிட்டு வந்த?” என்று கேலி செய்தான் சதீஷ்.

“பேச்சு திசை மாறுது. மேடம், உங்களை மற்ற பெண்களுடன் கலந்து பழகச் சொன்னேன். உங்களுக்கு நல்ல கம்பெனி இல்லைன்னா கொஞ்ச நாளில் இங்கே போரடிக்க ஆரம்பிச்சுடும்” என்றேன்.

“நீ சொல்றது புரியுது பையா! ஆனா உன் வீட்டிற்கு வந்தாலோ அல்லது நீ எங்க வீட்டிற்கு வந்தாலோதான் என்னால் கம்ஃபர்ட்டபிளா ஃபீல் பண்ண முடியுது. பொது விஷயங்கள் கேட்க - பேச முடிகிறது. குறிப்பா என்னுடைய படிப்பு, அந்தத் துறை சம்பந்தமான கேள்விகள் எல்லாம் நீதான் கேட்கற. உனக்கும் சைக்காலஜில நல்லா இண்ட்ரஸ்ட் இருக்குன்னு தெரிய சந்தோஷமா இருக்கு. உன்னுடன் பேசும் போது ஐ ஃபீல் அட் ஹோம். மற்ற எல்லார் வீட்டிலும் உங்க கம்பெனி அல்லது உங்க பாஸ்கள் பற்றி மட்டும்தான் பேசறாங்க. அங்கே உள்ள லேடீஸ் அடுத்தவர்களின் பண இருப்பு, யார் ஷேர் மார்க்கெட்டில் எவ்ளோ தொலைச்சா, எவ்ளோ சம்பாதிச்சா, எவள் இப்போதைக்கு புதிசா நகை வாங்கினா, புது உடை எடுத்தா என்பதைத் தாண்டி ஏதும் பேச மாட்டேங்கறாங்க. சிலர் இன்னும் வல்கரா எவளுக்கு எவன் மீது கண்ணுங்கற மாதிரியெல்லாம் பேசறாங்க. இதை எல்லாம் ஜீரணிச்சுக்கிட்டு மேலுக்கு பல்காட்டிப் பழகறது என் நேச்சருக்கு ஒத்து வராத விஷயம். ஆனா நீங்க சொன்ன மாதிரி பேராடிக்க சான்ஸ் இருக்கு. அதைத் தவிர்க்கறதுக்கு ஒரு வழி இருக்கு. சொன்னா உன் ஃப்ரெண்ட் கேட்க மாட்டேங்கறாரே”

“என்ன விஷயம்?”

“போச்சு, ஆரம்பிச்சுட்டியா?” என்றான் சதீஷ் வெடுக்கென்று.

ஷோபனாவின் முகம் வாடத் தொடங்க, “நீங்க சொல்லுங்க மேடம்” என்று ஊக்கினேன்.

“நான் வேலைக்குப் போகலாம்னு...”

“வேலைக்கா? என்ன வேலை?”

“இங்கே ஒரு மாடல் ஸ்கூல் இருக்கு. தெரியுமா உனக்கு?”

“ம். சொல்லிக்கிட்டாங்க. மாணவர்களுக்கு நீச்சல், குதிரையேற்றம்லாம் சொல்லித் தர்றாங்கன்னு. ஃபீஸ் எல்லாம் கூட தாறுமாறா ஜாஸ்தியாமே”

“இப்போ அதுவா முக்கியம்?”

“சாரி, மேலே சொல்லுங்க.”

"அந்த ஸ்கூல்ல சைல்ட் கௌன்ஸலர்னு ஒரு போஸ்ட் இருக்கு. அதுக்கு ஆட்கள் வேணும்னு விளம்பரம் தந்திருக்காங்க."

"சைல்ட் கௌன்ஸலரா? அப்படின்னா?"

"மாணவர்களின் பிரச்னைகளை உளவியல்பூர்வமா அணுகி தீர்வு காண்பதற்கும், அவர்களுடைய பெற்றோர்கள்தான் பிரச்னைன்னு தெரிஞ்சா அவங்களை அழைத்து ப்ராப்பர் கௌன்ஸலிங் மூலமா சரி செய்யறதுக்கும் அங்கே உளவியல் துறைல கௌன்ஸலிங்கில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவங்களை வச்சிருப்பாங்க. இப்போ முக்கிய ஊர்களில் எல்லாம் பெரிய பள்ளிகளில் இந்த மாதிரி கௌன்ஸலர்களை நியமிச்சு வச்சிருக்காங்க. எவ்வளவு இண்ட்ரஸ்டிங் ஜாப் தெரியுமா?"

எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. "குழந்தைகளின் கல்வித் தேர்ச்சிக்கு இவ்வளவெல்லாம் டெக்னிக்குகள் யோசிக்க ஆரம்பிச்சுட்டாங்களா? வெரி குட்" என்றேன்.

"அதெல்லாம் ஹைடெக் டிராமா. பிள்ளை சொன்னபடி கேட்கலைன்னா இழுத்து வச்சு நாலு அடி போட்டா சரியாயிட்றான்" என்றான் சதீஷ் சிரித்தபடி.

அவனைச் செல்லமாக முறைத்தாள் ஷோபனா.

"உங்களுக்கு என்ன தெரியும் சைக்காலஜி பத்தி. நல்ல திறமைசாலிகள் இருந்தும் தொடர்ந்து அசிங்கமான முறையில் தோத்துக்கிட்டே இருக்கிறதால நம்ம கிரிக்கெட் டீமுக்கே சைக்காலஜிகல் ட்ரீட்மெண்ட்தான் இப்போதைக்கு அவசியம்னு முடிவுக்கு வந்திருக்காங்க. அதாவது தெரியுமா?"

"அதெல்லாம் ஒரு ட்ரீட்மெண்ட்டுக்கும் அவசியமில்லை. டீம் ஜெயிச்சாத்தான் காசு, தோத்தா ஃபைன் கட்டணும்னு ரூல் போட்டுட்டாலே தொடர்ந்து ஜெயிக்க ஆரம்பிச்சுடுவாங்க." என்று சிரித்தான் சதீஷ்.

"நீங்க விளையாட்டாவே கிண்டலடிச்சிட்டிருங்க. நான் பையாகிட்ட பேசிட்டிருக்கேன்."

"இப்போ என்ன செய்யணும்?" என்று கேட்டேன்.

"இன்னிக்குத் தேதியில் மேல் நடுத்தர வர்க்க ஜனங்களுக்கு பணம்ங்கறது ஒரு பிரச்னையே இல்லைன்னு ஆனதுக்கப்புறம் மனசளவிலான பிரச்னைகள் தான் பெருகிட்டே இருக்கு. பல பேருக்கும் அவங்க பிரச்னைன்னு நினைக்கற பல விஷயங்களுக்கான எளிய தீர்வுகள் அவங்களுக்குள்ளேயே இருக்குங்கறது தற்காலிகமா மறந்திருக்கு. அதனை லேசா ப்ரஷ் அப் பண்ணி விட்டா தெளிவா, இயல்பா, சந்தோஷமா வரலாம்ங்கறது தெரியறதில்லை. நான் இந்த மாதிரி ஒரு சேவை செய்யணும்னுதான் இந்தத் துறையையே படிப்புக்குத் தேர்ந்தெடுத்து கௌன்ஸலிங்கில் ஸ்பெஷலைஸ் செய்து கோல்ட் மெடல் வாங்கி இருக்

கிறேன். அதைப் புரிஞ்சுக்கவே மாட்டேங்கறார். இந்த வேலையை நான் தேடிப் போகலை. வீட்டிலிருந்து மூணு கிலோ மீட்டர் தொலைவில் இவ்வளவு நவீனமா ஒரு ஸ்கூல் இருக்கும். அங்கே கௌன்ஸலர் வேலை கிடைக்கும்னு கனவா கண்டேன்? வேலை நேரமும் ரொம்ப சௌகரியமானது. காலை பத்து மணியிலிருந்து மாலை மூணு மணி வரைக்கும்தான். நீங்க ஆபீஸ் போனதுக்கப்புறம் போகப் போகிறேன். நீங்க மாலை வருவதற்கு முன் திரும்பப் போகிறேன். என்ன கஷ்டம் இருக்க முடியும்?"

எனக்கு அவள் சொல்வது எல்லாம் அவளுடைய கோணத்தில் சரி என்றே பட்டாலும் சதீஷின் பிடிவாதம் எனக்குத் தெரியும்.

அவனுக்குப் பெண்கள் வேலைக்குப் போவது பிடிக்காது என்பது ஒருபுறம் (பொண்ணு வாசல் வழியா வெளியே போக, பிரச்னைகள் ஜன்னல் வழியா உள்ளே போகும்); 'நான் ஒருமுறை முடிவெடுத்துவிட்டால் எடுத்ததுதான், மாறுவதற்கு வாய்ப்பே இல்லை' என்கிற ஜம்பம் மறுபுறம்.

அவனைச் சம்மதிக்க வைத்து இதற்கான அனுமதி பெறுவதற்கு சைக்காலஜியில் புதிதாகத்தான் வேறு கோர்ஸ் படித்து வர வேண்டும்.

அடுத்த ஒரு வாரமும் தினமும் கரைத்துப் பார்த்தாள் ஷோபனா. நானும் என் பங்கிற்கு என் எல்லையின் அளவு தெரிந்த அளவிற்குத் தனியாக சதீஷிடம் சொல்லிப் பார்த்தேன்.

"இல்லைடா. இந்த ஆர்வம் மெல்ல மெல்ல அளவு கடக்க ஆரம்பித்துவிடும். எனக்குத் தேவை ஒரு நல்ல ஒய்ஃப். அந்த இலக்கணத்தில் கச்சிதமாகப் பொருத்தி இருக்கும் ஷோபனாவை வேறு பரிமாணங்களுக்கு ஆளாக்கி அதன் சாதக பாதகங்களை அனுபவித்துப் பார்க்கும் சோதனை முயற்சிகளுக்கு நான் தயாரில்லை" என்றான் உறுதியாக.

## 4

ஆனால் இந்த விஷயம் எங்களை விடுவதாக இல்லை. அடுத்த நாட்களில் பேச்சு எங்கே ஆரம்பமானாலும் சுற்றிச் சுற்றி கௌன்ஸலிங்கிலேயே வந்து நின்றது.

ஷோபனா அந்த டாப்பிக் பற்றிப் பேசும்போதெல்லாம் அவளுடைய முகத்தில் தெரிந்த ஆர்வமும் வெளிச்சமும் அவள் எவ்வளவு நேசித்து அந்தத் துறையைத் தேர்ந்தெடுத்துப் படித்திருக்கிறாள் என்று காட்டின.

எனக்கும் அந்த விஷயத்தில் கொஞ்சம் சுவாரஸ்யம் ஏற்பட்டது.

"மேடம்! நீங்க படிச்ச விஷயங்கள் குறித்து இவ்வளவு சொல்றீங்களே!

ஏதாவது ப்ராக்டிக்கலா உதாரணம் சொல்ல முடியுமா? உங்கள் படிப்பின் போது இந்த மாதிரி கௌன்ஸலிங்கால யாரையாவது சரி செஞ்ச உதாரணம் இருக்கா?"

ஷோபனா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"ஒன்றா இரண்டா? ஏகப்பட்டது இருக்கு."

"ஏதாவது ஒண்ணு சொல்லுங்களேன்"

"ஒரு பள்ளியில் நல்லா படிச்சிட்டிருந்த பையன் திடீர்னு கொஞ்சமா மார்க்குகள் வாங்க ஆரம்பிச்சான். அவங்க அப்பா அவனைக் கூட்டிட்டு வந்தார். அந்த கேஸை என்னைத்தான் டீல் பண்ணச் சொன்னார்கள்" என்று ஆரம்பித்தாள்.

நான் பதில் ஏதும் பேசாமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். சுவாரஸ்யம் காட்டாவிட்டாலும் சதீஷின் முகத்திலும் கூட அவள் சொல்லப் போவதைக் கூர்ந்து கேட்கும் பாவனை தெரிந்தது.

"அந்தக் குடும்பத்தின் பின்னணி என்னன்னா ஒரு மேல் நடுத்தரக் குடும்பம். அம்மா, அப்பா, ஒரே பையன். அவன் நான்காம் வகுப்பு படிக்கிறான். அப்பா எம்.ஏ. படிச்சவர். அரசுத் துறையில் ஒரு நல்ல பொறுப்பில் இருப்பவர். அம்மா காலேஜ் பார்க்காதவள். பையன் நல்லா துருதுருன்னு இருந்தான். எல்லா வகுப்புகள்லயும் பரீட்சைகள்லயும் முதல் மார்க் தவிர வேறு எதையும் காணாதவன். அம்மா மேல பிரியம் அதிகம். அப்பாவுக்கோ தன் மகன் ஆளும் அழகா இருந்து படிப்பிலயும் கெட்டிக்காரனா இருக்கானே என்கிற கர்வம் சொல்லி மாளாது. அவருக்கு அவன் அவ்வளவு செல்லம்.

இந்தப் பின்னணியில் இருந்த பையன் 'திடீரென்று கடந்த மூன்று நான்கு மாதங்களா நடந்த எல்லா பரீட்சைகள்லயும் ஃபெயில் மார்க் வாங்கிட்டு வந்து நிக்கறான். அது சம்பந்தமான வருத்தமோ, குற்ற உணர்வோ இல்லாமல் இருக்கிறான். என்ன கேட்டாலும் பதில் சொல்ல மாட்டேனென்கிறான்' என்று அவன் அப்பா அழாதகுறையாகச் சொல்கிறார்."

"சரி, என்ன செஞ்சீங்க?"

"பையனிடம் பேசிப் பார்த்தேன். எனக்குப் படிக்கவே பிடிக்கலை மேடம்னு சொன்னான். எதுக்குப்பா என்று கேட்டால் பதில் சொல்லவில்லை. குழந்தை பதில் சொல்லாமல் இருப்பதற்குக் காரணம், பதில் தெரியாததாலா அல்லது பதிலைச் சொல்ல விரும்பாததாலா என்பது ஒரு நிமிடத்தில் கண்டுபிடித்து விடக்கூடிய விஷயமே. அந்தப் பையன் பதில் சொல்லாமல் மறைக்கிறான் என்று புரிந்துபோனது.

அவன் அப்பாவை அழைத்துப் பேசினேன். அவனுடைய படிப்புக்கும், பெருமைகளுக்கும் உரிய அங்கீகாரம் தருகிறாரா என்று கேட்டறிந்தேன்.

அவருடைய பேச்சின்படி அவருடைய முழு கவனமும் சந்தோஷமும் அவனுடைய வெற்றிகளின் மீதுதான் இருக்கிறது என்று தெரிந்தது. தன்னுடைய அலுவலக சகாக்களிடம் அவர் பெருமையடித்து மகிழும் விஷயமே பையனுடைய சாதனைகள் பற்றித்தான் என்பதை முழு மனதுடன் ஒப்புக்கொண்டார். அவனுடைய அம்மாவிடம் பேசினேன். குறிப்பிடத்தக்க க்ளூ எதுவும் கிடைக்கவில்லை.

'அவன் முதல் பரீட்சையில் ஃபெயிலாகி வந்து நின்னப்போ என்ன செஞ் சீங்க?' என்று கேட்டபோது அவனுடைய அப்பா அவனை வாழ்மொழியாகக் கண்டித்திருக்கிறார் என்று தெரிந்தது. அவனுக்குக் கொழுப்புப் பிடிச்சுப் போச்சுன்னும் அடுத்த பரீட்சைக்குள் அவன் தன்னைத் திருத்திக்கலைன்னா அடி நொறுக்கி விடுவதாகவும் சொல்லி இருக்கிறார். அவன் அம்மா, அவனிடம் பிரியமாகக் கேட்டிருக்கிறாள். அவளிடம் மட்டும் பதில் சொல்லாமல் அழுதிருக்கிறான். அவளும் அப்பாவின் மிரட்டலுக்குப் பயந்துதான் அழுகிறான் என்று நினைத்து சமாதானம் மட்டும் செய்திருக்கிறாள்.

ஆனால் பையன் அடுத்த பரீட்சையில் இன்னும் மோசமாகச் செய்திருக்கிறான். அவன் அப்பா அடித்து விளாசியிருக்கிறார்.

'நீங்க அடிக்கும்போது அதனை அவன் எப்படி எதிர்கொண்டான்? 'இனிமே ஒழுங்கா படிப்பேம்ப்பா' என்பது மாதிரியான தற்காப்பு வாக்கியங்களை உபயோகித்தானா? என்று கேட்டேன். 'அதுதான் மேடம் எனக்கு ஆச்சர்யம். அவன் பதில் ஏதும் சொல்லலை. வலி தாங்காமல் அழுதானே ஒழிய, அந்த மாதிரி மன்னிப்பெல்லாம் ஏதும் கேட்கவில்லை' என்றார்.

அவன் அம்மா அடுத்த பிள்ளை ஏதும் உண்டாகி இருக்கிறாளா? என்று கேட்டேன். அந்த ஸ்டேஜும் சிறுவர்களை மிகவும் பாதிக்கின்ற ஒரு ஸ்டேஜ் ஆகும். ஆனால் இவன் கேஸில் அதுவும் இல்லை.

மீண்டும் அந்தப் பையனிடம்தான் பேசினேன். அவன் பெரும்பாலும் மௌனமாகவே இருந்தான். ஏதேதோ பேசிக்கொண்டிருந்த போது பேச்சு வாக்கில் அம்மா பாவம் என்கிற வார்த்தைகளைத் தன்னையும் அறியாமல் உதிர்த்தான்.

அதன் பிறகுதான் அந்தக் கோணத்தில் ஆராய ஆரம்பித்தேன். உண்மைகள் வெளிவரத் தொடங்கின. அவன் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் இடையில் நல்லவிதமான அன்பு சார்ந்த உறவு இல்லை. ஆனால் அவர்களுக்கிடையேயான மனக்கசப்பு பையனுக்குத் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒருமுறை அவனுடைய அப்பா, அம்மாவை அடித்து நொறுக்குவதை அவன் பார்த்துவிட்டான்.

அடிக்கும்போதே 'இந்த விஷயத்தைப் பையனுக்குத் தெரியும்படி காண்பிச்ச, உன்னைக் கொன்னே போடுவேன்' என்று அப்பா மிரட்டலாகச் சொன்னதையும்

கேட்டிருக்கிறான். அது எல்லா ஆம்பளைங்களும் வீட்டில் சாதாரணமாகச் சொல்கின்ற வார்த்தைகள்தான் என்று அந்தப் பிஞ்சு மனத்துக்குத் தெரிய வில்லை. அருமையான அம்மாவை ஏதோ காரணத்துக்காக இந்தப் பாவி அப்பா அடிக்கிறார். என்னிடம் அதை மறைத்து நல்லவர் மாதிரி நடிக்கிறார். அப்பாவிடமிருந்து அம்மாவைக் காப்பாற்ற முடியாத சிறுவயது. ஆனால், அம்மாவைக் கஷ்டப்படுத்தும் அப்பாவைக் கஷ்டப்படுத்த ஒரே வழி அவர் தன் ஆபீஸ் நண்பர்களிடம் பெருமையாகப் பேசுகின்ற என் படிப்பைக் கெடுத்துக் கொண்டு அவர்கள் இவரைக் கேவலமாகப் பேச வைக்க வேண்டியதுதான் என்று எட்டு வயதுப் பையனின் மனத்தில் எண்ணங்கள் தோன்றி அதனைச் செயல்படுத்தியும் காட்டுவான் என்பதை ஊகிக்க முடிகிறதா உங்களால்?" என்று கேட்டு நிறுத்தினாள் ஷோபனா.

நாங்கள் இருவரும் மௌனம் காத்தோம்.

"இப்போது உள்ள சிறுவர்களுக்கு எக்ஸ்போஷர் அதிகம்; அதனாலேயே ஐக்யூவும் அதிகம். அவர்களை ஜாக்கிரதையாக ஹாண்டில் பண்ணவில்லை என்றால் பெரிய விபரீதங்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன."

"சரி, அவனை அப்புறம் எப்படி சரி செய்தீர்கள்?"

"அவன் பேரண்ட்ஸிடம் ஒற்றுமையா இருங்கன்னு சொல்லி இருப்பா. இது ஒரு பெரிய விஷயமா?" என்றான் சதீஷ் வெடுக்கென்று.

"அதுதான் இல்லை. என்னுடைய டாஸ்க் அந்தப் பையனின் படிப்பை சரி செய்வதுதானே ஒழிய அவனுடைய பெற்றோர்களின் ஒற்றுமைக்கு வழி காண்பதல்ல. அவர்களிடையே என்ன பிரச்னை என்று கூட நான் கேட்டுக் கொள்ளவில்லை.

அவர்கள் சண்டை போடாமல் இருக்க வாய்ப்பு இருக்கிறதா என்று மட்டும் கேட்டேன். அவர்களின் பதிலில் இருந்து அது சாத்தியம் இல்லை என்று தோன்றியது. பையனின் படிப்பு சரியாக வேண்டும் என்பதில் மட்டும் இருவருக்கும் அக்கறை இருப்பது தெரிந்தது. பையனும் புத்திசாலியாகத்தான் இருந்தான். அவர்களுக்கு வேறு மாதிரியான வழியைத்தான் சொன்னேன். அப்பாவிடம் 'நீங்க அவனுடைய படிப்பைக் கொஞ்சம் கூடக் கண்டு கொள்ளா தீர்கள். அவன் நூத்துக்கு நூறு எடுத்தாலும் சைபர் எடுத்தாலும் உங்களுக்கு அது எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தலைன்னு காட்டிக்கோங்க. அலட்சியமா இருங்க. அவன் குறைஞ்ச மார்க் எடுக்கறதே உங்களை டிஸ்டர்ப் பண்ணத்தான். நீங்க டிஸ்டர்ப் ஆகலைன்னா அவன் படிக்க ஆரம்பிச்சுடுவான். அதேபோல் அவனுடைய அம்மா அவனிடம் அடிக்கடி, 'நீ நல்லா படிச்சுத் தான்டா என் பிரச்னைகளைச் சரி செய்யணும். உன் படிப்பு, உன்னை நம்பித் தான் நான் உயிரோடவே இருக்கறேன்'ங்கற மாதிரி சொல்லிட்டே இருக்கட்டும். உங்களுக்குள் பிணக்கு மறைந்து இணக்கம் ஏற்படற வரை இந்த உத்திதான் அவனை மீண்டும் நல்லா படிக்கறவனா மாத்தும்னு சொல்லி அனுப்பினேன்.

அடுத்த பரீட்சைகளில் அவன் மீண்டும் முதல் மார்க்குகள் எடுக்க ஆரம்பிச்சுட்டான்னு கேள்விப்பட்டேன். அதனைச் சொல்ல வந்தபோது அவனுடைய பேரண்ட்ஸிடம் இருந்த தெளிவு அவர்களுடைய பிரச்னைகளைக் கூட மிக விரைவில் சரி செஞ்சுக்குவாங்கன்னு காட்டிச்சு"

"மார்வலஸ் மேடம். வாழ்த்துக்கள்." என்றேன்.

"இந்த மாதிரியான வெற்றிகள் தர்ற சந்தோஷம் இருக்கே, அதுக்கெல்லாம் இணையா ஒண்ணு இந்த உலகத்திலேயே கிடையாது" என்ற ஷோபனாவின் விழிகள் கனவில் மிதந்தன.

"வாஸ்தவம்" என்று மட்டும் என் வாய் முணுமுணுத்தது.

# 5

சதீஷின் வீட்டில் வைத்து தொலைக்காட்சியில் ஓடிக்கொண்டிருந்த 'ஆனந்த்' என்கிற இந்திப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

'உருக்கமான நல்ல படம்; இந்தி சினிமா, மசாலா மயக்கத்தில் ஆழ்வதற்கு முந்தைய காலகட்டத்தில் நல்ல கதை அம்சத்துடன் அமிதாப்பச்சனும், ராஜேஷ் கன்னாவும் சேர்ந்து நடித்த இரண்டே படங்களில் இதுவும் ஒன்று; அமிதாப்பின் முதல் படம்; குச்சி மாதிரி சின்னப் பையனாட்டம் இருக்கும் அமிதாப்பைப் பார்க்கச் சிரிப்பாக இருக்கும்' என்றெல்லாம் முன்பே சதீஷ் சொல்லி இருக்கிறான். அவர்கள் இருவரும் பலமுறை பார்த்துவிட்ட படம் என்றாலும் நான் முழுமையாக இப்போதுதான் பார்க்கிறேன்.

கதாநாயகனுக்கு வரும் உயிர்க்கொல்லி வியாதியாக ப்ளட் கேன்ஸர் அறிமுகமான படமும் அநேகமாக இதுவாகத்தான் இருக்கும். அமிதாப் டாக்டர். ராஜேஷ் கன்னாவுக்கு ப்ளட் கேன்ஸர். அது தெரிந்ததாலேயே தன் காதலை உதறிவிடும் ராஜேஷ் கன்னா, அதற்கான சிகிச்சையை அவருடைய ஊரான டில்லியிலேயே எடுத்துக்கொள்ளாமல் ஏன் மும்பைக்கு ஓடிவந்து விடுகிறார் என்கிற மர்மம், காதலியின் திருமண நாளன்று சொந்த ஊரில் இனியும் இருக்க முடியாது என்றுதான் இங்கே வந்துவிட்டார் என்று உடைபடும் தருணத்தில் உணர்ச்சி பொங்க வைத்தது. ராஜேஷ் கன்னா ஆயுள் முடியும் தருவாயில் கூட வேறு ஊரிலேயே சாக முடிவு செய்யும் கதையின் போக்கு எனக்குள் ஏதோ செய்ய, என் முகம் வாடிப்போனதை முதலில் கண்டது ஷோபனாதான்.

"பையா! என்னாச்சு?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை" என்றேன். ஆனால் என்னுள் புரண்டெழுந்து கொண்டிருந்த எண்ண ஓட்டங்கள் என்னைச் சமநிலைக்கு வர இயலாமல் செய்தன.

அவர்கள் இருவரும் சிறிது நேரம் என்னுடன் ஏதேதோ பேசிப் பார்த்தார்கள். நான் வித்தியாசமாக இருப்பது எனக்கே தெரிந்தது.

"நான் கிளம்புகிறேன்" என்று என்னுடைய வீட்டுக்குக் கிளம்ப எழுந்தேன்.

"வேண்டாம். மூவரும் 'ஃபன் அண்ட் ஃபுட்' போகலாம்" என்று எழுந்தான் சதீஷ். என்னால் தவிர்க்க முடியவில்லை.

குஜராத்தின் சாலையோர ஓட்டல்கள் மிகவும் வித்தியாசமானவை. பெரிய அளவில் பணம் கொட்டிக் கட்டப்பட்டிருப்பவை. குறிப்பாக மெசானாவிலிருந்து அகமதாபாத் செல்லும் சாலையின் இருபுறமும் எழுபது கிலோ மீட்டர் இடைவெளியில் ஏழு பெரிய ரெஸ்டாரண்ட்டுகள் உள்ளன. அவை வழிப்போக்கர்களையும் சாலைப் பயணிகளையும் மட்டும் நம்பிக் கட்டப் பட்டவை அல்ல. கார் வைத்திருக்கும் பணக்காரர்கள் இரவு உணவுக்கு நண்பர்கள் சகிதமாகவோ, குடும்ப சகிதமாகவோ ஊரிலிருந்து அவ்வளவு தூரம் போய் உட்கார்ந்து காற்று வாங்கியபடி ஒன்றரை மணி நேரமும் சில நூறு ரூபாய்களும் செலவழித்து விட்டுத் திருப்தியாக வீடு திரும்பும் காட்சிகள் அங்கே சகஜம். .

மெசானாவில் இருந்து பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் 'ஃபன் அண்ட் ஃபுட்' ஓட்டலும் 'கோகுல் காம்டே' ஓட்டலும் எங்கள் மூவருக்கும் மிகவும் பிடித்தவை.

'ஃபன் அண்ட் ஃபுட்' ஓட்டலின் விஸ்தாரமான இயற்கை எழில் சூழ்ந்த புல் வெளியில் அமர்ந்தபடி பேசிக்கொண்டிருந்தோம் நாங்கள்.

"கடைசியில் அந்த வேலைக்கு என்னைப் போக விடாமலேயே செய்து விட்டீர்கள்" என்ற ஷோபனாவின் குரலில் கொஞ்சம் அடிபட்ட தன்மை இருந்தது.

சதீஷிடம் ஓர் அலட்சியப் புன்னகை.

"மேடம்! கேட்கிறேனே என்று தப்பாக எடுத்துக்காதீங்க. நான் ஒரு காலத்தில் நிறைய கதைகள், கவிதைகள் எல்லாம் எழுதிக் கொண்டிருந்தேன். இப்போ சுத்தமா எதுவும் எழுத முடியாமப் போச்சே. அது ஏன்?" என்று ஆரம்பித்தேன்.

ஷோபனா என்னை உற்றுப் பார்த்தாள்.

"மேடம் நான் நிச்சயமாகக் கேலி செய்யவில்லை. சீரியஸாகத்தான் கேட்கிறேன்"

"இதற்கு அவளென்ன பதில் சொல்வது? நானே சொல்கிறேன். இருபத்தைந்து வயதுக்குள் முக்கியமான பிளாண்ட்டுக்கு இன்சார்ஜ் என்கிற முக்கிய பொறுப்புக்கு வந்தாச்சு. உன்னுடைய ப்ரையாரிட்டியில் கம்பெனி வேலை முன்னே வந்துவிட்டது. ஹாபி விஷயங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டிருச்சு.

இதைச் சொல்ல ஒரு சைக்காலஜிஸ்ட் வேண்டுமாக்கும்?"

"இல்லை. அவருடைய கேள்விக்கான பதில் அவ்வளவு சுலபமானதில்லை. கொஞ்சம் கௌன்ஸலிங் செய்துதான் சரியான பதில் காண முடியும்" என்றாள் ஷோபனா.

சதீஷ் வாய் விட்டுச் சிரித்தான்.

"அவளிடம் ரொம்பவும் இந்த டாப்பிக்கைப் பற்றிப் பேசாதேடா; உலகத்தின் எல்லா பிரச்னைக்கும் கௌன்ஸலிங்தான் தீர்வுன்னு சொல்லுவா."

அவனுடைய கேலியைக் கண்டு கொள்ளாமல் அவனைப் பார்த்துக் கேட்டாள் ஷோபனா. "மிஸ்டர் மாஸ்டர் ஆஃப் சப்ஜெக்ட்ஸ்! நான் ஒரு கேள்வி கேட்கிறேன். நம் நாட்டில் ஏன் பெண்கள், படிச்சவங்க, படிக்காத வங்கன்ற வேறுபாடே இல்லாமல் போலிச் சாமியார்களிடம் அடிமைகளாகித் தங்கள் வாழ்க்கையைச் சிக்கலுக்கு உள்ளாக்கிக்கிறாங்க? சொல்லுங்க, பார்க்கலாம்!"

ஷோபனாவின் கேள்வி என்னை வியக்க வைத்தது. மேலோட்டமான சிந்தனையில் விடை அகப்படவில்லை. சதீஷ் சட்டென்று பதில் சொன்னான். "பொம்பளைங்களுக்கு அவ்வளவுதான் அறிவு"

எனக்குச் சிரிப்பு வந்தது.

"இது பதிலே அல்ல. சால்ஜாப்பு"

"மேடம்! அவன் கிடக்கான், நீங்க சொல்லுங்க, என்ன காரணத்தால பெண்கள் போலிச் சாமியார்களிடம் தொடர்ந்து ஏமாறத் தயாரா இருக்காங்க?"

"பெண்கள் மட்டும்தான்னு இல்லை. ஆண்களுமே கூட அவர்களிடம் தொடர்ந்து ஏமாறுவதற்குக் காரணம் அவங்களோட அழுத்தப்பட்ட உணர்வுகளுக்கு சரியான வடிகால் அமையாமல் போவதுதான்."

"புரியலை மேடம்"

"பரபரப்பான வாழ்க்கை, காரணம் அறியாத ஓட்டம், நின்றால் நாம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடுவோம் என்கிற அர்த்தமற்ற பயம் இவை எல்லாம் தான் இன்றைய வாழ்க்கைக்கு இலக்கணம் என்று ஆகியாச்சு. இதெல்லாம் சரியா தவறா என்கிற வாதத்துக்குள் நான் போக விரும்பவில்லை. எல்லோருக் குள்ளும் தான் என்கிற உணர்வு கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டது மட்டும் நிஜம்.

வயிற்றுப் பசி முக்கிய பிரச்னையாக இருக்கும் போது அங்கீகாரப் பசி எவரையும் பிடிப்பதில்லை. இன்று நாட்டில் பசிப்பிணி கிட்டத்தட்ட ஒழிந்துவிட்ட நிலை. மத்தியத்தர வர்க்கம் என்பது மேல் வர்க்கமாகவோ, மேல் நடுத்தர வர்க்கமாகவோ ஆகியாச்சு. படிப்பறிவும், ஓரளவுக்கு மேலான

பணவசதியும் அவர்களுக்கு திருப்தி அளிப்பதற்கு பதிலாக, மீடியாக்களின் மூலம் ஏற்பட்ட நிறைந்த எக்ஸ்போஷர், இத்தனை அடைந்த பிறகும் அடுத்தவர்களுடனான ஒப்பீட்டில் தான் ஒன்றுமே இல்லையோ என்கிற ஏக்கத்தைத்தான் தந்திருக்கின்றன பையா.

மனம் நெருங்கிய நண்பர்களுடன் வெளிப்படையான பேச்சு என்பது இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டது. நாமெல்லாம் தொலைக்காட்சி சீரியல்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் கூட நம்மைச் சார்ந்தவர்களுக்குக் கொடுப்பதில்லை என்பது சோகமான உண்மை. எல்லோரும் எல்லோரிடமும் தாமரை இலைத் தண்ணீராகத்தான் பழகுகிறார்கள். போலித்தனங்கள் பேச்சிலும், பொறுப்பற்ற தன்மைகள் செயலிலும் சகஜமான விஷயங்களாக அங்கீகாரம் பெற்றுவிட்டன. நம் வாழ்க்கைத்தரம் எவ்வளவு தாழ்ந்துவிட்டது என்பதற்கான சான்றுகள்தாம் இவை எல்லாம்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகுவதாகச் சொல்லிக்கொண்டு நாம் என்னதான் நம்மை ஏமாற்றிக் கொண்டு போலி வாழ்க்கை வாழ முயன்றாலும் நம்முடைய ஜீன்களிலும் குரோமோசோம்களிலும் இருக்கின்ற பாரம்பரிய நல்லறிவுரைகள் மனசாட்சியின் உருவத்தில் குத்திக் கொண்டேதான் இருக்கும். தப்பான வழியில் செல்லும்போது ஒருவனோ, ஒருத்தியோ உறுத்தல் இல்லாமல் இருக்கவே முடியாது என்பது அறிவியல்பூர்வ உண்மை. மனித சமூகத்துக்கு மட்டுமே உள்ள உளவியல் பிரச்னைகளுக்கு மூலகாரணமே இதுதான்.

மனம் திறந்த விவாதங்களும் கருத்துப் பரிமாற்றங்களும் இத்தகைய உறுத்தல்களிலிருந்து விடுபடவும் நம்மை நேர்ப்படுத்திக் கொள்ளவும் உதவக் கூடிய எளிய வழிகளாகும். ஆனால் நம்மில் பலரும் இதை உணர்வதே இல்லை.

எத்தனை ஆங்கில நாவல்களில் படிக்கிறோம்... சைக்கியாட்ரிஸ்ட்டையோ சைக்காலாஜிகல் கௌன்ஸலரையோ பல கேரக்டர்களும் சந்திப்பதாக. மேல் நாடுகளில் காய்ச்சல், தலைவலிக்காக டாக்டரைச் சந்திப்பதை எவ்வளவு சாதாரணமாக எடுக்கிறார்களோ, அதே போல் சைக்கியாட்ரிஸ்ட்டை சந்திப்பதையும் சாதாரணமாகக் கருதுகிறார்கள். உலகப் பணக்காரர் கம்ப்யூட்டர் புலி பில்கேட்ஸ் தன்னுடைய பதின்மூன்றாவது வயதில் சைக்கியாட் ரிக்ட்ரீட்மெண்ட் எடுத்ததைத் தொலைக்காட்சியில் சொல்லிக்கொள்ள வெட்கப்படவில்லை. நம்நாட்டில்தான் மனநலம் என்றாலே பைத்தியம் என்கிற அளவுகோலில் வைத்துப் பார்க்கும் பக்குவமற்ற தன்மை. நமது திரைப்படங்களும் சரி, கதைகள், தொலைக்காட்சி நாடகங்களும் சரி அந்தத் துறை பற்றிய சரியான விழிப்புணர்வை இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகும் ஏற்படுத்தத் தவறி இருக்கின்றன என்று தான் சொல்லுவேன்.

இத்தகைய சமூகத்தில் தன் உள்ளக் கிடக்கைகளையும், பிரச்சினைகளையும் பகிர்ந்துகொள்ள சமூக அங்கீகாரத்துடன், இன்னும் சொல்வதென்றால் சமூக

மரியாதையுடன் கூடிய வழியாக இருப்பது ஒரு சாமியாருக்குத் தன்னை சிஷ்யையாகவோ, சிஷ்யனாகவோ வரித்துக் கொள்வதுதான்.

இதிலே நல்ல சாமியார்களிடம் தஞ்சம் அடைந்தவர்கள் நிஜமான கௌன்ஸலிங் விளைவை அனுபவித்து உணர்ந்து தம் அழுத்தங்களிலிருந்து விடுபட்டு வெற்றிகரமான சாதனையாளராக நடைபோடுகிறார்கள். போலிகளிடம் அகப்பட்டுக் கொண்டவர்கள் சீரழிகிறார்கள். துரதிர்ஷ்டவசமாக போலிகள்தாம் நிறைய எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

மனநலத் துறைக்கு சரியான அங்கீகாரம் அளிக்கப்படும் வரையில் சமுதாயம் ஆரோக்கியமாக இருக்க வாய்ப்பில்லை பையா.."

இவ்வளவையும் ஷோபனா படபடப்போ, பதற்றமோ இன்றி நிதானமாகச் சொன்னவிதமே எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் அமைதியாக அவள் சொன்னவைகளைக் கேட்டபடி அமர்ந்திருக்க, சதீஷ், அவ்வளவுதானா இன்னும் இருக்கா என்கிற தொனியில் அலட்சியமாக இருந்தான்.

"ஸோ, இப்போ என்ன சொல்ல வர்றீங்க மேடம்? உங்க கௌன்ஸலிங் திறமை மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. நான் எந்த சாமியாரிடமோ ஜோஸியரிடமோ போய் ஏமாறாமல் உங்களிடம் என்னை ஒப்படைக்கிறேன். என்னுடைய விடுபட்டுப் போன எழுத்துத் திறமையை வெளிக் கொண்டு வர முடியும்னு நீங்க நம்பினா நான் முழு ஒத்துழைப்பு தர்றேன். சதீஷ், அதன் பிறகாவது ஒப்புக்கொள்கிறானா பார்க்கலாம்." என்றேன்.

சதீஷின் முகத்தில் அதே கேலிப் புன்னகை விரித்திருக்க, ஷோபனாவின் கண்களில் ஓர் ஒளி தெரிந்தது. "யாருக்கும் எதையும் நிரூபிப்பதற்காக இல்லாவிட்டாலும், நீ தற்காலிகமாக மறந்திருக்கும் எழுத்துப் பழக்கத்தை நிச்சயமா என்னால் மீண்டும் ஆக்டிவேட் பண்ணிவிட முடியும்." என்றாள் மென்மையாக.

கட்டை விரலை உயர்த்தி சதீஷிடம் சவால்விடுவதாக பாவனை செய்தேன்.

"அதற்கு நான் உன்னிடம் நிறைய கலந்துரையாட வேண்டி இருக்கும் பையா! நான் கேட்பவைகளுக்கு நீ ஒளிவு மறைவில்லாமல் பதில் சொல்ல வேண்டி இருக்கும்."

"நான் எதற்கும் தயார். இப்போதிருந்தே நான் உங்களுடைய பேஷண்ட்"

ஷோபனா சிரித்தாள். "இது டாக்டர், பேஷண்ட் உறவு அல்ல; கௌன்ஸலர், கௌன்ஸல் உறவு." என்று திருத்தினாள். அவள் முகத்தில் ஒரு வெளிச்சம் வந்து அமர்ந்திருந்தது. அதில் நான் எழுத்தாளனாகிவிட்ட காட்சி தெரிந்தது.

# 6

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாக இருக்க, அன்று மதியமே எங்கள் முதல் கலந்துரையாடல் தொடங்கியது.

ஞாயிற்றுக்கிழமைகளில் மதிய உணவிற்குப் பிறகு சதீஷ் ஒரு நீண்ட தூக்கம் போடுவது வழக்கம். அவன் படுக்கை அறையில் தூங்கப்போக, நானும் ஷோபனாவும் அவர்கள் வீட்டு ஹாலில் எதிர் எதிரே அமர்ந்து கொண்டோம்.

"பையா! முதலில் ஒரு சந்தேகத்தைக் கேட்டுக்கறேன். நேத்திக்குப் படம் பார்த்து ஏன் அப்படி மூடு அவுட் ஆகிப் போன?"

"இன்னிக்கு நாம் பேசப் போற விஷயத்துக்கான அடித்தளமே அந்தப் படத்தல் இருந்தது மேடம். அதன் உந்துதலில்தான் உங்களிடம் கௌன்ஸலிங் பற்றிய பேச்சையே நேத்து ஆரம்பிச்சேன்."

ஷோபனா கேள்விக்குறியாக என்னைப் பார்த்தாள். "வெல், இந்தக் கலந்துரையாடல்களின் போது மட்டும் உன்னை நீங்க, மிஸ்டர் என்றெல்லாம் மரியாதை கொடுத்தே அழைக்கிறேன். அப்போதான் ஓர் அந்நியத் தன்மை இருக்கும். என்னுடைய அனாலிஸிஸிலும் பாரபட்சமற்ற தன்மை இருக்கும்." என்கிற முன்னுரையுடன் ஆரம்பித்தாள் ஷோபனா.

"உங்களுக்கு எழுத்துத் திறமை இருக்கிறதா எப்போ கண்டுகொண்டீங்க?"

"பள்ளி நாட்களிலேயே ஏதாவது கதை, கவிதைன்னு எழுதிக்கிட்டே இருப்பேன் மேடம். நிறைய இலக்கியப் போட்டிகளில் பரிசுகள் வாங்கி இருக்கேன். உள்ளூரில் லைப்ரரியில்தான் குடியாகக் கிடப்பேன். நிறை புத்தகங்கள் படித்தருக்கிறேன். எப்படி ஆர்வம் ஏற்பட்டதுங்கறதுக்கு என்னிடம் பதில் இல்லை. ஆனால், பெரிய எழுத்தாளனா ஆகணும்; நான் எழுதிய புத்தகங்கள் நூலகங்களில் இடம் பெற்று இருக்கணும்ங்கற ஆசை எப்படியோ அடி மனசுக்குள் ஊறிப்போய் இருந்தது."

"மேற்கொண்டு என்ன செஞ்சீங்க?"

"ஏதாவது எழுதிக்கிட்டே இருந்தேன். அப்பாதான் படிச்சுப் பார்த்திட்டு அந்த எழுத்துக்களை எப்படி பக்குவப்படுத்தறதுன்னு சொல்லிக் கொடுத்தார். பத்திரிகைகளுக்கு அனுப்பறது பத்தியும் அறிவுரைகள் சொன்னார். என்னுடைய பதினாறாவது வயதில் முதல் சிறுகதை தமிழின் முக்கிய பத்திரிகையில் வெளி வந்தது மேடம்" என்றேன். பெருமையில் என் குரல் மிதப்பது தெரிந்தது.

ஷோபனாவின் முகத்தில் பெருமை மிகுந்த புன்னகை. "வெரிகுட்" என்றாள்.

எனக்கும் மேற்கொண்டு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

மாலைமதி 02.06.2003

"சொல்லுங்க. அப்புறம் என்னாச்சு?"

"அப்புறம் நிறைய எழுதினேன். அது அவசரத்திலும் ஆர்வக் கோளாறிலும் எழுதியதுன்னு இப்போ தெரியுது. அப்போ அவை எல்லாம் பிரசுரமாகாமல் திரும்பி வர, எனக்குள் ஏமாற்றம். அப்பாதான் 'முதலில் ப்ளஸ் டூவில் நிறைய மார்க் எடுத்து வாழ்க்கையை செட்டில் செய்து கொண்ட பிறகு கதை எழுதுவதில் கவனம் செலுத்து'ன்னு அறிவுரை சொன்னார்."

"சரிதான். நீங்க என்ன செஞ்சீங்க?"

"அவர் சொன்னதைக் கேட்டேன். இன்ஜினீயரிங் சேர்ந்தப்புறம் கொஞ்சம் எழுதினேன். என் எழுத்தில் பக்குவம் வர ஆரம்பித்திருந்தது. அடுத்த நாலு வருடங்களில் படிப்பு முடிச்சு இன்னொரு இன்ஜினீயரிங் காலேஜில் விரிவுரையாளராகவும் வேலைக்குச் சேர்ந்திட்டேன்.

"இஸிட்? நீங்க இங்கே வேலைக்கு வரும் முன் காலேஜில் வேலை பார்த்தீர்களா? எங்கே? உங்க மாநிலத்திலேயேவா?"

"ஆமாம்"

"அப்புறம் எதற்கு இங்கே வந்தீர்கள்?"

புரியாமல் அவளைப் பார்த்தேன்.

"வீட்டுக்குப் பக்கத்திலேயே அருமையான வேலை. நல்ல சம்பளம். நிறைய ஓய்வு நேரம். படிக்க - எழுத நல்ல சூழ்நிலை. பழகவும், எப்போதும் இளமையா உணர வைக்கவும் மாணவப் பட்டாளம்னு... ஒரு நல்ல சொர்க்கத்தை விட்டு இங்கே வந்து தப்புப் பண்ணிட்டீங்க."

நான் தலைகுனிந்து அவஸ்தையை மறைக்க முயற்சித்தேன். "அங்கேதான் என் எழுத்துக்கள் மெருகும் ஏறிச்சு. எழுத்துக்கான சமாதியும் அங்கேதான் எழும்பிச்சு." என்றேன்.

ஷோப்னா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"மேடம்! இப்போ நான் சொல்லப்போறது இதுநாள் வரைக்கும் என் மனதைத் தவிர யாருக்கும் தெரியாத ரகசியம். இது நான் பொக்கிஷமா, பூவா, புனிதமா பூஜித்து வந்த விஷயம். உங்களிடம் சொல்வது வேற யாருக்கும் போய்விடாது என்கிற நம்பிக்கையில் என் இதயக் கதவுகளைத் திறக்கிறேன்..."

என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் ஷோபனா.

என் முகத்தல் ஓர் அசட்டுப் புன்னகை வந்து உட்கார்வது எனக்கே தெரிந்தது. சொல்லலாமா, வேண்டாமா, இதைத் தவிர்த்து விடலாமா என்கிற தயக்கம் கூட வந்தது.

(தொடர்ச்சி 36ம் பக்கம்)

**31ம் பக்கத் தொடர்ச்சி....**

"மிஸ்டர்!" என்றது ஷோபனாவின் குரல் கம்பீரமாக.

திடுக்கிட்டு நிமிர்ந்தேன். அவள் என்னை இதுவரை எப்போதுமே 'பையா' என்றுதான் அழைப்பது கடந்த ஆறுமாதப் பழக்கமாகி இருக்க, முதன் முறையாக மிஸ்டர் போட்டுப் பெயர் சொல்லி விளிக்கிறாள் என்று தோன்ற, காரணம் அறியாத குற்றஉணர்வால் மனதினுள் சின்னமாக ஒரு வலியை உணர்ந்தேன்.

"மிஸ்டர்! இந்த பர்ட்டிகுலர் ஸெஷனில் நீங்கள் என் எதிரில் உட்காரும் போது நம்மிருவர் இடையே இருப்பது வெறும் கௌன்ஸலர் மற்றும் கௌன்ஸல் உறவு மட்டுமே என்று சுட்டிக்காட்டவே உங்களைப் பெயர் சொல்லி அழைத்தேன். ஒரு கௌன்ஸல், தன் கௌன்ஸலரிடம் சொல்லும் விஷயங்கள், ஒரு பாதிரியாரிடம் பாவமன்னிப்பு வாங்க வேண்டி கன்ஃபஷன் பாக்ஸில் சொல்லப்படும் விஷயங்களுக்கு ஒப்பாக ரகசியமாக வைக்கப்படும். இவ்வளவு ஏன், இந்த மாதிரியான ஸெஷன்கள் முடிந்த பிறகு நான் சாதாரண ஷோபனாவாக உங்களிடம் பேசும்போதும் பழகும்போதும் இந்த விஷயங்கள் குறித்த சாயல் கூட வெளிப்படாமல் பழகுகிறேனா இல்லையா, பாருங்கள்."

என் மனம் தெளிந்தது.

"மேடம்! நான் என் இன்ஜினீயரிங் கல்லூரிப் படிப்பின் கடைசி வருடத்தில் இருக்கும்போதே வேலை வாய்ப்புகள் கண்ணில் பட ஆரம்பித்திருந்தன. அப்போதெல்லாம் எல்லா பொதுத்துறை நிறுவனங்களிலும் வருடம் தவறாமல் நூற்றுக்கணக்கில் இன்ஜினீயர்களை வேலைக்கு எடுத்தபடி இருப்பார்கள். ஓரளவுக்கு மேல் நன்றாகப் படிக்கும் எவருக்கும் குறைந்தது நான்கைந்து வேலைகள் கிடைத்து எதில் போகலாம் என்று தேர்ந்தெடுத்து சேரும் வாய்ப்புகள் இருந்த காலம். எனக்கு என்ன காரணத்தினாலோ கல்லூரி விரிவுரையாளராகப் போக வேண்டும் என்கிற ஆசை."

ஷோபனா ஏதும் பேசாமல் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"அப்போது தமிழ்நாட்டில் நிறைய தனியார் இன்ஜினீயரிங் கல்லூரிகள் பெருகி இருந்தன. விரிவுரையாளர் வேலைகள் நிறைய எப்போதும் காலியாக இருக்கும். நிறைய கல்லூரிகளில் யூ.ஜி.ஸி. சம்பளம் தரமாட்டார்கள். சும்மா ஆயிரம், இரண்டாயிரம் என்று தருவார்கள். படித்து முடித்து வேலைகளுக்கு மனு போட்டுக் கொண்டு நேர்முகத் தேர்வுகளுக்குப் போய் வந்து கொண்டிருக்கும் நிலையில் இருக்கும் இன்ஜினீயர்களுக்கு இந்தப் பணம் யதேஷ்டம் என்று தோன்றும். உடனே வேலைக்குச் சேருவார்கள். ஆறு மாதங்களுக்குள் வேறு வேலை கிடைத்ததும் ஓடிவிடுவார்கள்..."

"உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்."

"ம். இவர்களுக்கு மத்தியில் எனக்கு நிரந்தரமாகவே விரிவுரையாளர்

பணியில் இருக்க வேண்டும் என்கிற தீவிர எண்ணமே இருந்தது. படிப்பில் கடைசி செமஸ்டரின் போதே சில கல்லூரிகளுக்கு விண்ணப்பித்தபடி இருந்தேன். அரசு கல்லூரிகளில் சேர வேண்டும் என்றால் அதற்கு முதுகலைப் படிப்பு முடித்திருக்க வேண்டும். என் திட்டம், தனியார் கல்லூரியில் சேர்ந்து பணியில் இருந்தபடியே பகுதி நேரப் படிப்பாக முதுகலையையும் முடித்து கொள்ளலாம்; அந்தக் கல்லூரி பிடித்திருந்தால் அதில் தொடரலாம்; அல்ல வேறு அரசுக் கல்லூரிக்கு மாறிக் கொள்ளலாம் என்பதாக இருந்தது. ந விண்ணப்பித்திருந்த இடங்களில் ஒரே ஒரு கல்லூரியில் இருந்து மட் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வந்திருந்தது. அந்த நாள்..."

என் முகத்திலொரு புன்னகை வந்து அமர்ந்தது.

"நேர்முகத் தேர்வுக்கு இருபதுக்கும் மேற்பட்டவர்கள், வெவ்வேறு வயதுகளில், வெவ்வேறு துறைகளுக்காக வந்திருந்தார்கள். அத்தனை பேரிலும் தனி நிலவாக அவள் இருந்தாள்."

ஷோபனாவின் முகத்தில் இப்போது ஒரு கீற்றுப் புன்னகை.

"இந்த நிமிடத்தில் இத்தனை வருடங்களுக்கு அப்புறமும் அவளைப் பற்றி நினைக்க ஆரம்பித்த கணத்தில் அதே சிலிர்ப்பு ஏற்படுகிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள் மேடம், அன்னிக்கு நான் எப்படி ஆஃப் ஆகி இருப்பேன் என்று. ஐயோ, அந்த உணர்வை வர்ணிக்கவே முடியாது. அவள் அப்படி ஓர் உலகப் பேரழகி என்று நான் சொல்ல வரவில்லை. குடும்பப் பாங்கு, ஹோம்லி என்பார்களே, அப்படி இருந்தாள். அவ்வளவுதான். ஆனால் எனக்குள் அப்படி ஓர் ஈர்ப்பு. அவளைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பது போல்.

நேருக்கு நேர் ஏறிட்டுப் பார்க்க தயக்கமாகவும் இருந்தது. நான் பெண் களைப் பார்க்க ஏங்குபவன் அல்ல. நான் படித்த கல்லூரியில் கிட்டத்தட்ட பாதிப் பேர் பெண்கள். எத்தனையோ பேரிடம் படிப்பு பூர்வமாகவும் நட்பு பூர்வமாகவும் பழகியவன்தான். அதனால் எனக்கு அவளிடம் ஏற்பட்ட ஈர்ப்பு ஒரு வகையான இன்ஃபாச்சுவேஷன் அல்ல என்கிற அளவுக்கு என்னால் உறுதி தர இயலும்"

"அவள் பெயரைச் சொல்லவில்லை நீங்கள்"

ஒரு கணம் தயங்கினேன்.

"அவசியம் சொல்லணுமா?"

"நீங்க எந்தக் காகிதத்தில் என்ன எழுதினாலும் பிள்ளையார் சுழி போடுவது போல் காகிதத்தின் உச்சியில் 'K' என்று போட்டுவிட்டு எழுதறீங்க. மத்தவங்களுக்கு அது என்னவோ உங்க பெயரின் முதல் எழுத்தைப் போட்டுக் கறீங்க, அது உங்களுக்கு கான்ஃபிடன்ஸ் தருதுங்கற மாதிரி ஓர் இமேஜை உண்டாக்கிக்கிட்டீங்க. என்னால் ஓரளவுக்கு ஊகிக்க முடியுது, அந்தப்

பெண்ணின் பெயர் அந்த எழுத்தில்தான் தொடங்கியாக வேண்டும் என்று. சரியா?"

அவளை வியப்புடன் பார்த்தேன்.

"எஸ். யூ ஆர் ரைட். அவள் பெயர் காவ்யா. அது அன்றைய தினத்தில் எனக்குத் தெரியாது என்பதுதான் நிஜம். நான்தான் சொன்னேனே, அவளை ஏறிட்டு பார்க்கவே தயக்கமாக இருந்தது என்று. என் கல்லூரியில் எவ்வளவு கலை நிகழ்ச்சிகளுக்கு மேடைகள் ஏறி இருக்கிறேன், சபைக் கூச்சம் இல்லாமல் எவ்வளவு நிகழ்ச்சிகள் நடத்தி இருக்கிறேன். கல்லூரியில் மாணவர்களாலேயே நடத்தப்பட்ட பத்திரிகையில் எவ்வளவு கான்ட்ரவர்ஷியலான கட்டுரைகளை எழுதிப் பெண்களின் விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கும் ஆளாகி இருக்கிறேன், எவ்வளவு பேரிடம் எதிர்வாதம் செய்திருக்கிறேன், என்னால் அந்தப் பெண்ணிடம் சென்று அவளுடைய பெயரைத் தெரிந்துகொள்ள முடியவில்லை என்பது எவ்வளவு வியப்பான விஷயம் என்று எனக்கே தோன்றியது."

"தென்?"

"நேர்முகத் தேர்வு முடிந்து நான் ஊருக்கு வந்துவிட்டேன். அவளுடைய நினைவுகள் ஒதுங்கிக்கொள்ள, கடைசி செமஸ்டரின் கடமை என்னை அழுத்திக் கொண்டது. ப்ராஜெக்ட் ஒர்க்கின் வைவா வோசி முடிந்து நான் பெருமூச்சு விட்டபடி பாக்கி வைத்திருந்த சினிமாக்களைப் பார்க்க ஆரம்பித்த நான்காம் நாள் அந்தக் கல்லூரியில் இருந்து அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் வந்தது."

"நீங்கள் வெளிமாநிலத்துக்கோ, வெளிநாட்டுக்கோ வேலைக்குப் போக வேண்டும் என்று உங்கள் வீட்டில் சொல்லாமல் இப்படி லெக்சரராகப் போவதற்குச் சம்மதித்தார்களா?"

"மேடம், நான் வீட்டுக்கு ஒரே பையன் என்பதால் செல்லம் அதிகம். என் விருப்பு-வெறுப்புகளுக்கு முழுச் சுதந்திரம் இருந்தது."

"மேலே சொல்லுங்கள்"

"நான் கிளம்பிப் போய் அங்கே சேர்ந்தேன். கல்லூரி முதல்வர் தன் அறையில் வைத்து நெடுநேரம் பேசினார். படித்த இன்ஜினீயர்களே பொறுப்பு இல்லாமல் பாதி வருடத்தில் வேலையை விட்டு நின்று விடுகிற அவலத்தால் எந்த அளவுக்கு மொத்த மாணவர்களின் படிப்பும் இடைஞ்சலுக்கு உள்ளாகிறது என்று உருக்கமாகச் சொன்னார். நான் அவரிடம் 'நான் அப்படிப் போக மாட்டேன்' என்றும் முடிந்தால் இந்த வேலையிலேயே நிரந்தரமாக இருந்துவிடும் முடிவில் இருப்பதாகவும் சொன்னேன். அவருக்கு என் மீது அப்போதே ஒரு மரியாதை வந்துவிட்டிருந்தது. 'உங்க உறுதியை நேர்முகத் தேர்வு அன்றே கமிட்டியில்

எடை போட்டு விட்டோம். அதனால்தான் உங்க ரிஸல்ட் கூட வருவதற்கு முன் அப்பாயிண்ட்மெண்ட் போட்டாச்சு. இப்போதைக்கு கன்ஸாலிடேட்டாக மூவாயிரம் தருவோம். உங்க ரிஸல்ட் வந்தப்புறம் ரெகுலரைஸ் பண்ணிட்டு ஸ்கேல் ஃபிக்ஸ் பண்ணிக்கலாம்' என்றார். என் கவனம் எல்லாம் என்னுடன் சேர்ந்து வேறு யார் யார் அன்றைய நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள் என்று அறிந்துகொள்வதில் இருக்க, அதற்கு வழி தேடிக் கொண்டிருந்தேன்.

கல்லூரி அலுவலகத்தில் ஒரு அக்கவுண்டண்ட், இரண்டு கிளர்க்குகள், ஒரு டைப்பிஸ்ட் இவ்வளவு பேர்தான். யாரிடம் கேட்பது? என்னவென்று கேட்பது? அவள் பெயரோ, எந்த பிராஞ்ச் என்றோ கூடத் தெரியாத நிலையில் எப்படிக் கேட்பது என்று யோசித்துக்கொண்டு நான் நின்றிருக்க "எக்ஸ்க்யூஸ் மீ" என்கிற இனிய குரல் என்னைத் திரும்பிப் பார்க்க வைக்க... அவள்தான். எனக்கு குப்பென்று வியர்க்காத குறை."

ஷோபனாவின் முகத்தில் இதனை எதிர்பார்த்திருந்த குறிப்பு. நிறைய சினிமாக்களில் பார்த்துச் சலித்த விஷயம் என்பதால் இந்த மாதிரியான கணங்களின் சரியான சிலிர்ப்பு அவரவர்க்கு அனுபவம் ஏற்பட்டால் ஒழிய உணர முடியாது என்று தோன்றியது எனக்கு.

"ஜாயினிங் ரிப்போர்ட் எழுதணும். கொஞ்சம் உங்க பேனா கிடைக்குமா." என்று கேட்டாள். நான் இயந்திரகதியில் என் பேனாவை எடுத்து நீட்டினேன். அவளும் என்னுடன் இங்கே வேலைக்குச் சேருகிறாள் என்கிற விஷயமே என்னுள் எல்லாவிதமான இனிப்பு சமாசாரங்களையும் சுரக்க வைத்தது..."

ஷோபனாவின் முகத்தில் எந்தவிதமான உணர்வு வெளிப்பாடும் இல்லை. நான் சொல்வது போரடிக்கிறது என்கிற குறிப்பைக் கூட அவள் காட்டவில்லை. அவளுடைய கண்கள் தப்பித் தவறிக் கூட கைக்கடிகாரத்தையோ சுவர்க் கடிகாரத்தையோ பார்க்கவில்லை என்பது எனக்கு உற்சாகத்தைத் தந்தது.

கூடவே ரொம்பவும் விலாவாரியாகப் போட்டு அறுக்கிறேனோ என்று எனக்கே தோன்றியது.

"மேடம்! நான் ஜவ்வாக இழுத்து அறுப்பதாக உங்களுக்குத் தோன்றினால் தயவுசெய்து சொல்லிவிடுங்கள்" என்றேன்.

"நிச்சயமாக மாட்டேன். என்னிடம் நீங்க சொல்ல நினைக்கிற விஷயத்தை எப்படிச் சொல்ல வேண்டும் என்கிற உரிமையை உங்களிடமே விட்டு விடுகிறேன். கோர்வையாகச் சொன்னாலும் சரி, முன்னுக்குப் பின் முரணாகச் சொன்னாலும் சரி, சுருக்கமாகச் சொன்னாலும் சரி, விரிவாக இழுத்தாலும் சரி எல்லாம் உங்கள் இஷ்டம்" என்றாள்.

"என்னப்பா, எல்லாம் முடிந்ததா?" என்றபடி சதீஷ் எழுந்து வர, அன்றைய கலந்துரையாடல் முடிந்தது.

# 7

இரவு எட்டரை மணிவாக்கில் பரத் பாய், தன் மனைவியுடன் சதீஷின் வீட்டுக்கு வந்தார். நான் கிட்டத்தட்ட என் வீட்டுக்குக் கிளம்பிக் கொண் டிருந்தேன். அவருடைய வருகையால் உட்கார்ந்தேன்.

பரத் பாய் சதீஷின் வீட்டுக்கு ஆறு வீடுகள் தள்ளி குடியிருப்பவர். குஜராத்தி. மெஸானாவையே பூர்வீகமாகக் கொண்டவர். வியாபாரி.

அவர் மனைவி சராசரி குஜராத்திப் பெண் போன்ற உருவ அமைப்புடன், பெரிய உடம்புடன் இருந்தாள். சேலையைத் தலைப்பு மாற்றிப் போட்டிருந்தாள். நட்புபூர்வமான சிரிப்பு முகம் முழுக்க விரிந்திருந்தது.

வரவேற்று உட்கார வைத்து அவர்கள் இருவருக்கும் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள் ஷோபனா.

குஜராத்தில் இது வரவேற்கும் முறையில் முதல் படி. யார் வீட்டுக்கு இரவிலோ, பகலிலோ எப்போது யார் சென்றாலும் 'வாருங்கள்' என்கிற பொருள் பட, 'ஆயியே' என்று சொன்ன மறுகணம் அந்த வீட்டின் பெண் வீட்டினுள் போய், வந்திருக்கும் எல்லோருக்கும் தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பாள். வருடத்தின் ஒன்பது மாதங்கள் அதிக வெப்பத்துடன் இருக்கும் பூமி என்பதால் நாக்கு பெரும்பாலான சமயங்கள் வறண்டே இருக்கும். அதனாலேயே நிறைய தண்ணீர் குடிக்க வேண்டி இருக்கும்.

தேவையே வாழ்க்கையின் அடிப்படைப் பாரம்பரியங்களை உருவாக்கு கின்றது அல்லவா!

"பாய் சாப்! எப்படி இருக்கிறீர்கள்?" என்று குசலம் விசாரித்தார், பரத் பாய்.

"உங்களைப் பார்க்கணும்னா இப்படி எட்டு மணிக்கு மேல்தான் வர வேண்டியிருக்கு. மற்ற ஆபீஸுகள் மாதிரி சாயங்காலம் வந்தோமா, சாய் குடிச்சோமா, வெளியே சுற்றக் கிளம்பினோமான்னு இருக்கவே முடியாதுங்களா, உங்க வேலையில்?" என்றார் பரிவாகப் பேசுவதாக நினைத்துக் கொண்டு.

சதீஷ், ஷோபனாவைப் பார்க்க, அவள் முகத்தில் எரிச்சல் மறைத்த நமட்டுச் சிரிப்பு. இவருக்கு எதற்கு இந்த வேண்டாத அக்கறை என்று நினைத்துக் கொண்டேன்.

சதீஷ் அவரிடம், "எதுவும் முக்கிய விஷயமா வந்தீங்களா?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை, நம்ம பிண்ட்டுவுக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்கிறது. அடுத்த மாதம் ஏழாம் தேதி. பத்திரிகை கொடுக்க வந்தோம்" என்றார் பரத் பாய்.

"யார்? நம்ம பிண்ட்டுவுக்கா?" என்றாள் வியப்புடன் ஷோபனா.

பிண்ட்டு பரத் பாயின் மகன். அவனுக்கு மிஞ்சிப்போனால் பதினேழு வயதுதான் இருக்கும். இப்போதுதான் ப்ளஸ் டூ முடித்திருக்கிறான். அதற்குள் கல்யாணமா?

"உங்களுக்கு ஆச்சர்யமாத்தான் இருக்கும், எங்க ஆட்களில் இதுதான் கல்யாணத்துக்கு உரிய வயது" என்றாள் அவர் மனைவி.

"அதற்கில்லை மோசி! அவன் மேற்கொண்டு படித்து வேலை என்று செட்டில் ஆக வேண்டாமா?"

"வேலை என்னங்க? நம்ம வியாபாரத்தைத்தான் பார்த்துக்கப் போறான். பொண்ணு இவளுடைய அண்ணன் மகள்தான். அவளுக்குக் கல்யாணம் முடிந்த கையோடு அவள் அண்ணனுக்கும் பார்க்க வேண்டி இருக்கு. எல்லாம் காலாகாலத்தில் முடிச்சாத்தானே மனசு அலைபாயாம சீக்கிரமா பணம் பண்ற வேலையில் முழு மூச்சா இறங்குவானுங்க ஆம்பளைப் பயல்கள்" என்று சிரித்தார் பரத் பாய்.

எங்களுக்கு அலுவல்பூர்வமாகவும் கிராமங்களில் இருக்கும் சைட் வேலைகளின் மூலமாகவும் நிறைய குஜராத்திகள் பழக்கம் என்பதால் அவர்களுடைய வாழ்க்கை முறைகள் அத்துப்படி. அவர்களின் எண்ண ஓட்டம் எங்கு சுற்றினாலும் அதன் மையத்தில் பணம் பண்ணும் சிந்தனைதான் இருக்கும் என்பது நாங்கள் அறிந்ததே. அவர்களிடம் பிடித்த விஷயம் அவர்களுடைய சுறுசுறுப்பு. வித்தியாசமான பணத்தாசை. அடுத்தவர்களை ஏமாற்றியோ, மோசடி செய்தோ சம்பாதிக்க விரும்பாத நேர்மை. இந்த நோக்கம் மட்டும் விடாப்பிடியாக இல்லாமல் இருந்திருந்தால் கடந்த நான்கைந்து ஆண்டுகளில் அங்கே இயற்கையாகவும் செயற்கையாகவும் ஏற்பட்ட கொந்தளிப்புகளில் அந்த மாநிலமே காணாமல் போயிருக்கும்.

அவர்கள் கிளம்பிப் போனதும் பிண்ட்டுவைப் பற்றியே பேச்சினைத் தொடர்ந்தோம். குஜராத்தில் மிகக் குறைந்த வயதில் திருமணத்தைச் செய்து வைத்து விட்டு பொண்ணு-மாப்பிள்ளையை அடுத்த சில வருடங்களுக்கு அவரவர் வீடுகளிலேயே வைத்திருப்பதும், எப்போதாவது விசேஷ நாட்களில் மட்டும் ஒருவர், மற்றவர் வீட்டுக்குச் சென்று பார்த்துக்கொள்ளவும் பகலில் ஷாப்பிங், சினிமா என்று போகவும் அனுமதிப்பதும், இருபது வயதுக்கும் குறைந்த சின்னஞ்சிறு தம்பதிகள் சினிமா, கொட்டகைகளின் பகல் காட்சிகளின் போது மற்றவர்களுக்குப் படம் காட்டும் அவலங்களும் நாங்கள் கடந்த வருடங்களில் கண்டு கேலி செய்த விஷயங்கள்தான்.

"பிண்ட்டு யாருக்கு ஷோ காட்டப் போகிறானோ" என்று சிரித்தான் சதீஷ்.

"யார் யாருக்கெல்லாமோ இவ்வளவு குறைந்த வயதுகளில் கல்யாணம்

ஆகிறது. உங்க ஃப்ரண்டுக்கு மட்டும் ஏன்தான் ஆக மாட்டேனென்கிறதோ" என்றாள் ஷோபனா, நிஜமான கவலையுடன் என்னைப் பார்த்தபடி.

நான் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தேன். நேற்றுத்தான் காவ்யாவைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்திருக்கிறேன். அதன் தொடர்ச்சியில் எங்கள் காதல் நிரந்தரப் பிரிவில் முடிந்து, நான் ஓடிவராத குறையாக இங்கே வந்துள்ள விவரங்களை இன்னும் சொல்லவே இல்லை. இப்போது அப்பாவியாக என் கல்யாணம் பற்றிப் பேச்சு ஆரம்பிக்கிறாளே என்று தோன்றியது.

"ஹே! அவனுக்கு ஆக மாட்டேனென்கிறது என்கிற பதமே தவறு. அவனை இன்னிக்கு 'ம்' என்று சொல்லச் சொல். நாளைக்கே அவன் பேரண்ட்ஸுக்கு செய்தி சொல்லிடலாம்" என்றான் சதீஷ்.

"ஏன் பையா, மாட்டேன் என்றா சொல்கிறாய்?"

உதட்டைப் பிதுக்கினேன். 'இப்போது ரொம்பவும் காலதாமதமாகி விட்டது' என்று மட்டும் முணுமுணுத்துக் கொண்டேன்.

"என்ன காரணம்?"

"இந்தக் கேள்வியை கடந்த ஆறு மாதங்களில் நீ என்னிடம் நூறு முறையாவது கேட்டிருப்பாய். அவனிடமே கேளேன்."

"பதில் சொல்லு பையா" என்று என்னிடம் திரும்பினாள் ஷோபனா.

"வேறு பேச்சு பேசலாமே"

"இல்லை. இப்போது எனக்குப் பதில் தெரிஞ்சே ஆகணும்"

சிரித்தேன். "கல்யாணம் என்பது ஒரு அத்தியாவசியமான விஷயமாக எனக்குப் படவில்லை. எப்போதாவது அதுவும் வாழ்க்கையில் தேவை என்று உணர்ந்தால் பண்ணிக்கொள்வேன். போதுமா?"

சதீஷ், ஷோபனாவைக் கேலியாகப் பார்த்தான். "இவ்வளவு தெளிவாகச் சொல்கிறான். வேறு என்னவென்று அவனிடம் கேட்க முடியும்?"

"நான் கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு சவாலா சொல்கிற ஆட்களைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. நீங்க கூட அப்படித்தான் சொல்லிட்டு இருந்தீங்கன்னு உங்க வீட்டில் சொன்னாங்க. அவர்களெல்லாம் கட்டாயம் பண்ணிக்குவாங்க. ஆனால் 'நான் பிடிவாதமாக ஒன்றும் இல்லை; நானாக கன்வின்ஸ் ஆகும்போது பண்ணிக்கறேன்'னு சொல்கிற ஆட்கள் பாடுதான் கஷ்டம். ஏனென்றால் தெளிவாக இருப்பவர்களை, குழம்பி இருக்கும் மற்றவர்களால் பேசி ஜெயிக்க முடியாது பாருங்கள்"

சதீஷ் அவளையே உற்றுப் பார்த்தான். "நீதான் ஏதோ கௌன்ஸலிங் அது இது என்று அவனை மந்திரித்து வைத்திருக்கிறாயே, அப்படியே அது

தொடர்ப்பா கேட்கிற மாதிரி தூண்டில் போட்டுப் பாரேன்"

ஷோபனாவின் முகத்தில் பொய்க் கோபம் கடை விரித்தது. "நீங்க என் ப்ரொஃபஷனைக் கிண்டல் பண்ற மாதிரி இருக்கு. சாரி. இது பற்றிப் பேசாதீங்க"

"ஓ.கே. ஓ.கே." என்று கைகளை மேல்தூக்கிக் கும்பிட்டான் சதீஷ்.

"வெல், நாளைக்கு மேடத்துக்கு பிறந்தநாளாச்சே, எங்கேயாவது வெளியே போற மாதிரி பிளான் வச்சிருக்கீங்களா?" என்று கேட்டேன்.

"ஆமாம்ப்பா! நீ இப்படி வந்து போட்டுக் குடுக்க மாட்டியான்னுதான் நான் தவம் கிடந்தேன். நீ பாட்டுக்கு எதையாவது சொல்லி அவளுக்குள் ஒரு எதிர்பார்ப்பை உண்டாக்கி விட்ரு. என்பாடுதானே திண்டாட்டமாகப் போகுது?"

"அடேங்கப்பா! எவ்வளவு அக்கறை! எனக்கு அந்த மாதிரியான எதிர்பார்ப்பு ஏதும் இல்லை. இந்த ஒரு வருஷத்தில் எவ்வளவோ ஏமாந்து ஏமாந்து பக்குவப் பட்டாச்சு. நீங்க நாளைக்கும் காலையில் எழுந்து ஒரு வாழ்த்து கூடச் சொல்லாமல் ஓடிப்போயிட்டு நடுராத்திரியில் வந்து நின்று 'சாரி ஷோபனா, முக்கியமான ஒரு ஷட்டௌன் வேலை அட்டெண்ட் பண்ண வேண்டியதாப் போச்சுன்னு சொன்னாலும் எனக்கு அது ஏமாற்றமாக இருக்காது' என்றாள் விரக்தியான குரலில்.

"வெரி குட். இந்தப் பக்குவத்தைத்தான் நான் உன்னிடம் எதிர்பார்த்தேன். இதைத்தான் சொன்னார்கள் போலும், வெற்றிகரமான ஆணுக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள்னு" என்று அவளைச் சீண்டினான் சதீஷ்.

"உண்மை. ஆனால் அந்தப் பெண் என்ன மனோநிலையில் இருப்பாள்னு எவனும் சொல்லலியே"

"என் வேலை மீது இவ்வளவு வன்மம் வச்சிருக்கறதாலதான் உன் சித்தி பெண்ணுக்கு எங்க கம்பெனி மாப்பிள்ளை வந்த போது வேணாம்னு தடுத்தியா?"

ஷோபனா ஒரு கணம் மௌனம் சாதித்தாள்.

நான் கேள்வியாக அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தேன்.

"ஏன்? என்னாச்சு?"

"போனவாரம் ஷோபனா என் கூட ஒரு சண்டை போட்டு ஓய்ந்த எரிச்சலில் இருந்தாள். அந்த நேரத்தில் அவளோட சித்தி போன் செய்து தன் மகளுக்கு ஒரு வரன் வந்திருப்பதாகவும் அவரும் நம்ம கம்பெனியிலேயே ராஜமுந்திரி ப்ராஜக்டில் இருப்பதாகவும் உற்சாகமாகச் சொன்னாள். அதுக்கு இவளிடமிருந்து எப்படி பதில் வெடிச்சது தெரியுமா?" என்று சிரித்தான் சதீஷ். "அதை நான் சொன்னாக் கூட சரியாச் சொல்ல முடியும்னு தோணலை. ஷோபனா, நீயே சொல்லேன்"

ஷோபனா வெட்கத்துடன் குழைந்து சிரித்தாள். "இவர் சும்மா கலாட்டா பண்றார் பையா! சித்திகிட்ட 'உன் பெண்ணுக்குக் குறைந்த சம்பளத்தில் இருக்கிற, வேறு எந்த வேலையாவது பார்க்கிற, எவனையாவது கட்டிவை. இந்த கம்பெனியின் உற்பத்திப் பிரிவிலோ, தூரப்பணிப் பிரிவிலோ உள்ள ஒருத் தனுக்குக் கட்டி வச்சு அவள் வாழ்க்கையை சீரழிச்சிடாதே' என்று சொன்னேன்"

"அடடா! மேடத்துக்குக் கூட கோபம் வருதா?" என்று வியந்தேன்.

"அவள் உன்கிட்ட சப்ஜெக்ட் பேசறப்ப நல்லா நடிப்பா. எல்லாரும் அதுல தான் ஏமாந்து போறீங்க. உண்மையான வேஷம் எல்லாம் எனக்குத்தானே தெரியும்?" என்று தொடர்ந்து சீண்டினான் சதீஷ்.

"இல்லை மேடம்! நீங்க அப்படிச் சொல்லி இருக்கக் கூடாது" என்றேன். "சித்தி உங்களைப் பற்றித் தவறாக நினைத்திருப்பார்கள். அவங்களுக்கு நீங்க ஒவ்வொரு முறையும் விடுமுறைக்கு விமானத்தில் வருவது மட்டும்தான் தெரியும். தன் மகளும் அப்படி வந்து இறங்க வேண்டும் என்று கனவு கண்டிருப்பாங்க. உங்க கமெண்ட்டை ஏதோ பொறாமையின் வெளிப்பாடு என்றுகூட எடுத்துக் கொண்டிருக்கலாம்"

ஷோபனா என்னை வியப்புடன் பார்த்தாள். "என் மீதுதான் உங்களுக்கு எவ்வளவு அக்கறை. அதற்கு நன்றி. ஆனா ஒரு எழுத்தாளர் பெண்களைப் பத்தி இவ்வளவு சாதாரணமா எடைபோடக் கூடாது. என்னுடைய பதில் தனக்கா அல்லது எதிரே நின்னுட்டிருந்த என் புருஷனுக்கா என்பதைச் சித்தி அவ்வளவு தூரத்தில் இருந்து புரிஞ்சுக்கிட்டா. 'வெல்டன் ஷோபி, நல்லா கொடுத்த. ஆம்பளைங்களுக்கு இப்படி நடுநடுவுல டோஸ் விட்டுட்டே இருக்கணும், இல்லைன்னா அவங்க நம்மளை வீட்டுக்கான மெயின்டனன்ஸ் இன் சார்ஜ்ங்கற நிலைமைக்குத் தள்ளிடுவாங்க'ன்னு பாராட்டினா. நீங்க இப்படி கவலைப்படறீங்க" என்று சிரித்தாள்.

விஷயங்களை உள்வாங்குவதில் புதிய கோணம் இருப்பது எனக்குப் பாடமானது.

## 8

"அவள் அங்கேதான் இன்னொரு துறையின் விரிவுரையாளராக வேலை பார்க்கப் போகிறாள் என்று அறிந்ததும் எனக்குள் ஏற்பட்ட அதே பரபரப்பும் ஆனந்தமும் அவளுக்கும் என்னைக் குறித்து இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளவே எனக்கு ஆறு மாதங்களானது மேடம். அவள் மகா அழுத்தக்காரி. மனத்தின் எல்லா ஆசைகளையும் எண்ணங்களையும் அடக்கிக்கொண்டு முகத்திலோ, குரலிலோ ஒரு கோடிக் கூடக் காட்டாமல் இரும்பாக இருப்பதில் கில்லாடி. ஒரு வகையில் அந்த இடத்தில் அந்த மாதிரிதான் இருந்ததாக

வேண்டிய கட்டாயம்கூட.

கூர்மையான பார்வைகளும் குறும்பு நிறைந்த மனங்களும் கொண்ட மாணவர்கள் நிறைந்துள்ள கல்லூரியில், ஏகப்பட்ட விரிவுரையாளர்கள் நடமாடும் துறைகளுக்குள் இரண்டு வெவ்வேறு துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் யாருக்கும் தெரியாமல் காதலிப்பதென்பது எவ்வளவு கடினமான விஷயம் என்பதை நினைத்துப் பாருங்கள். நான் நான்கைந்து சக விரிவுரையாளர்களுடன் ஒரு வீட்டில் தங்கி இருந்தேன். அவள் சக பெண் விரிவுரையாளர்களுடன் வேறொரு இடத்தில் தங்கி இருக்கிறாள். நாங்கள் எங்கள் காதலுக்குத் தோழர்களையோ, தோழிகளையோ வைத்துக் கொள்ள வில்லை. யாருக்கும் தெரியாது. ஒரு சந்தேக இழை கூட எவருக்கும் ஏற்பட்ட தில்லை. அப்படி ரகசியம் கட்டிக் காத்தோம். என்ன இனிமையான நாட்கள்... பாருங்கள், நாங்க இரண்டு பேரும் அந்த அளவுக்கு மன ஒற்றுமை கொண்ட வர்களா இருந்தோம் மேடம். எந்தக் கூட்டத்துக்கு மத்தியிலயும் அவளைப் பார்க்கணும்னு எனக்குத் தோன்றுகிற அதே நேரம், அவளுக்கும் என்னைப் பார்க்கணும்னு தோணும். எங்கள் பார்வைகளின் அந்த அரை விநாடி சந்திப்பில் எவ்வளவோ வார்த்தைகள் பரிமாறிக் கொள்ளப்படும். என்னை அவளும் அவளை நானும் பார்த்துக்கொள்ளும் போது எங்கள் கண்களின் பாவைகள் கூட விரிந்தது கிடையாது. வேறு யாராவது பார்த்தால் கூட சாதாரணமான பார்வை மோதல் என்றுதான் நினைக்கத் தோன்றும். ஏதோ என்னையே நானும் அவளையே அவளும் பார்த்துக் கொள்வது போலத் தான் எங்கள் பார்வைப் பரிமாற்றங்கள் இருந்திருக்கின்றன. அவளே நானாகவும் நானே அவளாகவும் இருந்த அற்புத நாட்கள் அவை மேடம்.

ஒரு முறை பரீட்சை ஹாலில் நானும் அவளும் இன்விஜிலேட்டர்களாக இருந்தோம். அறுபது மாணவர்கள் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நானும் அவளும் விஸ்வாமித்திரரின் யாகம் காக்கும் ராம லட்சுமணர்கள் போல் வில்லுக்குப் பதிலாக பரீட்சை தாள்களுடன் குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டிருக்கிறோம். ஆகா! இன்று நினைத்தாலும் சுகமாக இனிக்கும் நாள் அது. மூன்று மணி நேரம். இருவரும் ஏதும் வாய் வார்த்தைகள் பரிமாறிக் கொள்ளவில்லை. ஆனால் மாணவர்கள் அறியாமல் கண்களாலேயே எவ்வளவோ பேசிக் கொண்டோம். காகிதம் ஒன்றில் ஏதாவது கேள்வி எழுதி அவளிடம் நடந்துகொண்டே கொடுப்பேன். அவளும் அதற்கு பதில் எழுதி என்னிடம் கொடுப்பாள். என்னுடைய ஜோக்குகளுக்கு அவள் கன்னம் சிவந்து குழைந்ததும், என் கவிதையை மடித்து தன் ஆடைக்குள் செருகிக் கொண்டதுமாக இப்படிக் கடிதப் பரிமாற்றங்களிலேயே அந்த மூன்று மணி நேரமும் மூன்று நிமிடங்களாக முடிந்துவிட்டது. அந்த மார்ச் இருபத்து மூன்றாம் தேதியையும், அவள் அணிந்திருந்த சிவப்பு சுடிதாரையும் என் வாழ்நாளில் மறக்க முடியாது.

இப்படியே நிறைய சொல்லிக்கொண்டே போகலாம் மேடம். உங்களுக்கு

போர் அடித்துவிடும். காலேஜ்டே கொண்டாடிய போது கலை நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாளராக இருந்த ஐந்து பேர் குழுவில் நானும் அவளும் இடம் பெற்றிருந்த நாட்களைச் சொல்வதா, கல்லூரி நடத்திய அறிவியல் கண்காட்சியின் பொறுப்புக் குழுவிலும் நாங்கள் இருவரும் இடம் பெற்றதைச் சொல்வதா, நான் எழுதும் படைப்புகளை அவளிடம் காட்டும்போதெல்லாம் தன்னுடைய ஜாடை தெரிவதாக அவள் நினைக்கும் கவிதைகளை அவள் எடுத்து வைத்துக் கொண்டதைச் சொல்வதா..."

# 9

"எல்லாம் நன்றாகப் போய்க்கொண்டிருந்தன மேடம். எங்கள் கல்லூரியிலேயே இருந்த வேறொரு விரிவுரையாளர் திண்டிவனத்தைச் சேர்ந்தவர். அவருடைய வீட்டுக்கருகில் ஒரு பெண்ணைக் காதலித்து மணம் செய்து கொண்டார். அந்தப் பெண்ணும் இவரும் ஒரே ஜாதி கிடையாது. அந்த ஏரியாவில் அதிகப்படியாக உள்ள ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்த பெண். அந்த ஜாதியினர் தங்கள் ஜாதிப் பெண் கலப்பு மணம் செய்து கொள்வதைக் கடுமையாக எதிர்ப்பவர்கள் என்பது ஓரளவு பிரசித்தம். அதனால் அவர்கள் இருவரும் ஓடிப்போய்த்தான் திருமணம் செய்து கொண்டார்கள். எங்கள் கல்லூரி ஆட்களிலேயே பலருக்கு அவர்கள் திருமணம் நடந்தது தெரியாது. திடீரென்று பலநாட்கள் அவர் கல்லூரிக்கு வரவில்லை. எங்கிருந்தோ தபாலில் இரண்டு மாத விடுப்பு வேண்டி விண்ணப்பம் மட்டும் அனுப்பி இருந்தார்.

அப்புறம்தான் வெடித்தது விவகாரம். அந்தப் பெண்ணின் உறவினர்கள் என்ற பெயரில் அந்த ஜாதிக் குண்டர்கள் கல்லூரிக்கெல்லாம் வந்து அவரைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினார்கள். அவருடைய பெற்றோரையும் தம்பியையும் பாடாய்ப்படுத்தி இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு இந்த விவகாரம் தெரியவே தெரியாது என்று கூறியும் நம்பாமல் அவருடைய வீட்டினைத் தீ வைத்துக் கொளுத்திவிட்டார்கள். அவரும் அந்தப் பெண்ணும் எங்கே இருக்கிறார்கள் என்பதே தெரியாமல் போனது. அவரை வேலையில் இருந்து நிர்வாகம் உடனடியாக நீக்கிவிட்டது. கிட்டத்தட்ட ஒரு மாத காலம் இதே பேச்சாக இருந்தது. கல்லூரியும் நாங்கள் குடியிருந்த வீட்டுப் பகுதிகளும் கொஞ்சம் பதற்றத்துடனேயே இருந்தன. இந்த விவகாரத்தில் பலியானதுதான் மேடம் என்னுடைய காதலும்."

ஷோபனா என் முகத்தையே எந்தவித உணர்ச்சியும் இன்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நம்ம ஆள் காவ்யாவும் அந்த ஜாதியைச் சேர்ந்த பொண்ணுதான்" என்று நிறுத்தினேன்.

ஷோபனாவின் முகத்தில் ஒரு புன்னகை வந்து அமர்ந்தது.

"அந்த சம்பவத்துக்குப் பிறகு காவ்யா என்னுடன் பேசுவதையே முழுதுமாகத் தவிர்த்து விட்டாள். நான் கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் யாரும் அறியாமல் அவளுடன் பேச சிரமப்பட வேண்டி இருந்தது. அவள் கடைசியாகப் பேசியது இதுதான். 'ஏதோ நாட்டு நிலைமை மறந்து இப்படி இருவரும் ஆசையை வளர்த்துக்கொண்டது தவறுதான். நல்லவேளையாக இந்தச் சம்பவம் நம் கண்களைத் திறந்து விட்டது என்று நம்புகிறேன். நாம் இந்த அளவில் பிரிந்து விடுவோம். எங்க ஜாதிக்காரங்க எந்த எல்லை வரைக்கும் போவாங்கன்னு எனக்குத் தெரியும். ஏதோ மயக்கத்தில் மறந்திருந்தேன். என்னால் நீங்களும் உங்கள் குடும்பமும் பட இருக்கும் கஷ்டங்கள் என் மனத்தினுள் காட்சிகளாக வந்து போய் என்னுடைய தூக்கத்தையே தொலைத்து விட்டன. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். அடுத்த கரையில் சொர்க்கமே காத்திருந்தாலும் அதனை அடைய ரத்த ஆற்றில்தான் நீந்திப் போக வேண்டி இருக்கும் என்றால் அப்படி ஒன்று நமக்குத் தேவையே இல்லை என்பது என் அபிப்ராயம். இவ்வளவு நாட்கள் காதல் என்கிற நிஜமான சுக அனுபவத்தை இருவருமே ஒவ்வொரு கணமும் அனுபவித்து உணர்ந்து கொண்டோம். போதும்."

எனக்கு மேற்கொண்டு பேச முடியாமல் தொண்டை அடைத்தது.

அப்போதைக்கு அன்றைய கலந்துரையாடலை முடித்துக் கொண்ட ஷோபனா, அடுத்த உரையாடலின் போது "எனக்கென்னவோ காவ்யா செய்தது சரி என்றே படுகிறது. அவள் எடுத்த முடிவில் எந்தத் தப்பும் இருப்பதாகத் தெரியவில்லையே" என்றாள்.

"இல்லை மேடம், அவள் அவசரப்பட்டு விட்டாள். பயந்து விட்டாள். 'நீங்க எழுத்தாளர்; கதை கிதைன்னு எழுத உட்கார்ந்துட்டா என்னையும் மறந்திடுவீங்க'ன்னு அவள் சொன்ன ஒரே காரணத்துக்காக அவளை மறக்கவே மாட்டேன் என்று உறுதி அளிப்பது போல் நான் எழுதும் எந்தக் காகிதத்திலும் உச்சியில் அவளுடைய பெயரின் முதல் எழுத்தைப் பிள்ளையார் சுழியாகப் போடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டவன் நான். என்னை அவள் நம்பி இருக்க வேண்டும்"

"என்ன செய்திருக்க முடியும் நீங்க?"

ஒரு கணம் தயங்கினேன். "நாங்கள் இருவரும் படித்தவர்கள் மேடம். எங்காவது போய்ப் பிழைத்திருக்க முடியாதா?"

"அவள் தன் பெற்றோரையும் குடும்பத்தையும் விட்டு வந்து விடுகிறாள் என்றே ஒரு வாதத்துக்காக வைத்துக் கொள்ளலாம். நீங்க உங்க வீட்டாரை விட்டு ஓடிப்போயிருக்க முடியுமா? அவளுடைய கவலை அது குறித்து இல்லையே. அதன் பிறகு உங்க வீட்டார் பட இருக்கும் கஷ்டங்களைக் கருத்தில் கொண்டுதானே அப்படி முடிவு எடுத்தாள்?"

என்னிடம் சரியான பதில் இல்லாதது போல் பெருமூச்சு ஒன்றை மட்டும் விடுவித்தேன்.

"சரி, அவள் சொன்னதோடு உங்கள் தொடர்பு முடிந்துவிட்டதா?"

"அவள் உணர்ச்சிவசப்பட்டு பயத்தில் அப்படிச் சொல்லி இருக்கிறாள் என்றுதான் எண்ணியிருந்தேன். கொஞ்ச காலம் விட்டுப் பிடிக்கலாம் என்று மௌனம் சாதித்தேன். ஆனால், அடுத்த இரண்டு மூன்று மாதங்களில் அவளுக்கு திருமணமே நிச்சயமாகி பத்திரிகை தர ஆரம்பித்து விட்டாள். அப்போதுதான் தெரிந்தது அவள் தன் வார்த்தைகளை எவ்வளவு சீரியஸாகச் சொல்லி இருக்கிறாள் என்று. ஆனால் காலம் கடந்துவிட்டிருந்தது. இனி அவளிடம் பேசுவதிலோ, மேற்கொண்டு அவள் மனத்தை மாற்ற முயற்சிப்பதிலோ அர்த்தம் இல்லை என்ற முடிவுக்கு நான் வந்த மறுகணம்..."

"ம்?"

"என் வேலையை ராஜினாமா செய்துவிட்டு அங்கிருந்து ஊருக்குப் போய் விட்டேன். மொத்தக் கல்லூரியும் என் முடிவைக் கேட்டு ஆச்சர்யப்பட்டு மறுபரிசீலனை செய்யச் சொல்லி வேண்டியது. மாணவர்கள் மற்றும் சக விரிவுரையாளர்கள் மத்தியில் அவ்வளவு பாப்புலர் நான். முதல்வர் தனியாக அழைத்து அரைமணி நேரம் பேசிப் பார்த்தார். அவர்களுக்குக் காரணமா சொல்ல முடியும் நான்? ஃபேர்வல் வைத்து வழியனுப்பினார்கள். எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு கிளம்புவது போல் அவளிடமும் போய் நின்றேன். அவள் கண்களில் நீர் பெருகி நின்றது. எவரும் அறியாமல் துடைத்துக் கொள்ளக் கூட அவள் முயற்சிக்கவில்லை என்பது மட்டும் எனக்கு ஏதோ அற்ப ஆறுதலைத் தந்தது.

அவ்வளவுதான். காவ்யா என்கிற அத்தியாயம் என் சுயசரிதையில் முடிந்து விட்டது என்று எண்ணினேன்.

ஆனால் அவள் தனியாகப் பிரியவில்லை; என்னுடைய எழுத்து ஆர்வத்தையும் சேர்த்து எடுத்துக் கொண்டுதான் பிரிந்து விட்டாள் என்று பிற்பாடு தெரியவந்தது. ஆமாம் மேடம், அதன் பிறகு நான் எவ்வளவோ தடவை முயற்சித்தும் என்னால் ஏதும் எழுதவே முடியவில்லை. 'கதை கிதைன்னு எழுத உட்கார்ந்துட்டா என்னையும் மறந்துடுவீங்க' என்று அவள் சொல்லியது என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருப்பது போன்ற பிரமையை இன்னும் அகற்ற முடியவில்லை."

இனிமேல் பேச ஏதும் இல்லை என்பது போல் பெருமூச்சு ஒன்றினையே முற்றுப்புள்ளியாக்கி நிறுத்திக் கொண்டேன்.

நெடுநேரம் வரை ஏதும் பேசாமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்த ஷோபனா, "அங்கே மொத்தம் எவ்வளவு காலம் இருந்திருப்பீங்க?"

"சரியா இரண்டு வருடங்கள்"

"வெல். அவள் செய்தது சரியா, தவறா என்கிற வாதமே நமக்குத் தேவையில்லை. எனக்கு நீங்கதான் கௌன்ஸல். என்னுடைய ப்ரையாரிட்டி உங்களுக்கான தீர்வுதான். ஓகே? இன்னும் அலுவலக சம்பந்தமான தாள்களில் கூட எழுத ஆரம்பிக்கும் போது உச்சியில் 'K' என்று போட்டுத்தானே எழுதறீங்க?"

"ஆமாம் மேடம்"

"நாளையில் இருந்து அந்தப் பழக்கத்தை விடறீங்க. ஓகே?"

தயங்கினேன். "இருந்தாலும் பழக்களதோஷம், கை வருமே"

"அப்படியே உங்களையும் அறியாமல் எழுதிவிட்டாலும் நினைவு வந்தவுடன் அதனை அடித்து விடுங்கள். இன்றிலிருந்து தினம் இரவில் பழைய டைரி அல்லது நோட்டுப் புத்தகத்தில் முன்பு எங்கெல்லாம் இந்த மாதிரி போட்டிருக்கீங்களோ அதில் ஐந்து பக்கத்திலாவது அடித்து விட்டுத் தூங்குங்கள்"

இப்போதைக்கு இது போதும் என்பது போல் எழுந்து கொண்டாள் ஷோபனா.

# 10

"அந்த காவ்யா உங்களுக்கு ஏதேனும் பரிசுப் பொருட்கள் கொடுத் திருக்கிறாளா?"

"இல்லை மேடம்"

"நீங்க ஏதாவது அவளுக்குக் கொடுத்திருக்கிறீங்களா?"

"என்னையே தரத் தயாராக இருந்தேன்"

"ஆனால் ஏதும் தந்ததில்லை?"

"நாங்கள் எங்களுக்குள் பரிமாறிக். கொண்டதெல்லாம் ஒருவரை ஒருவர் விழுங்கும் பார்வைகளையும், அர்த்த புஷ்டியான புன்னகைகளையும் சந்தர்ப்பம் கிடைத்த ரகசியத்தில் சில இனிப்பான வார்த்தைகளையும்தான் மேடம்"

"ஸோ, ஃபிஸிக்கலான பொருட்கள் என்று ஏதும் கிடையாது உங்களுக்குள் அவளுடைய ஞாபகங்களைக் கிளர்ந்தெழ வைக்க... இல்லையா? அப்படின்னா அவளை நினைக்காமல் இருப்பது ரொம்ப சுலபமாச்சே."

"அவளை மறந்தால்தானே மேடம் நினைப்பதற்கு? இந்த ஜீவன் இருக்கும்

வரைக்கும் ஒவ்வொரு சுவாசத்திலும் அவளுடைய நினைவுகள் மட்டும்தானே எனக்கு வழித்துணை?"

"நான் ஒன்று சொல்லுவேன். கொஞ்சம் கடுமையாகக் கூட இருக்கும். ஆனாலும் வேறு வழியில்லை. பொறுத்துக் கொள்ளுங்கள்"

"சொல்லுங்க"

"நீங்க ஒப்புக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் இன்றைய தேதியில் அவள் இன்னொருவரின் மனைவி. கசப்பாக இருந்தாலும் நிஜம் இதுதான். அவளை நீங்க மறந்தே ஆக வேண்டும். அவளுடைய நினைவுகளிலேயே வாழ்வதாக நீங்கள் சொல்லுவது கூட அவளைக் களங்கப்படுத்தும் முயற்சி என்று தான் சொல்லுவேன்"

"மேடம்!"

"எஸ். அந்த அபத்த வார்த்தைகள் இந்திய சினிமாக்களில் மட்டும் ஒலிக்கட்டும். நிஜ வாழ்க்கையில் தயவுசெய்து வேண்டாம். நீங்க வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதும் வேண்டாம் என்று இருப்பதும் உங்க விருப்பம். ஆழ்ந்து சிந்தித்து நீங்க எடுக்க வேண்டிய முடிவு. அதனை நம்முடைய கௌன்ஸலிங்கின் ஒரு பகுதியாக்குவது என் நோக்கமில்லை. அதனை உங்க முடிவுக்கே விட்டுவிடுகிறேன். ஆனால் உங்க முடிவுக்கு நீங்க மட்டுமே காரணமா இருங்க. அந்தப் பெண்ணைக் கருவியாக்காதீங்க. இப்போ அவள் இன்னொருவனின் மனைவியாக ஓரிரு குழந்தைகளுக்குத் தாயாகக் கூட வாழ்ந்து கொண்டிருப்பாள். உங்க எண்ணங்களால் அவளைக் களங்கப்படுத்தாதீங்க. புரியுதா?"

உள்ளூர கொஞ்சம் வலித்தது.

"இனிமேல் காவ்யா என்கிற வார்த்தையைக் கொஞ்ச நாட்களுக்கு உச்சரிக்காதீங்க. அந்தப் பெயரை ரகசியமா சொல்லிப் பார்த்துக்கறது, எதிலாவது எழுதிப் பார்க்கறது போன்ற விளையாட்டு சமாசாரங்களை விட்டுடுங்க. அந்த எண்ணம் கிளரும்போதெல்லாம் நீங்க எழுத்தாளனாக வேண்டிய கடமை பாக்கி இருக்கிறது என்று நினைத்துக் கொள்ளுங்கள். 'அவள் நினைவை அகற்றுவதெல்லாம் ரொம்பக் கடினம் மேடம்' என்பது போன்ற வசனங்களை என்னிடம் சொல்வதற்கு நான் அனுமதிக்கிறேன். ஆனால் அதனைச் சொல்லும் முன் அது அவசியம்தானா என்று மூன்று முறை யோசித்து விட்டுச் சொல்லுங்கள். ஓகே?"

கூட்டி விழுங்கியபடி மௌனம் சாதித்தேன்.

"உங்களுக்குக் கூடுதலா ஒண்ணு சொல்லணும்னு நினைக்கிறேன். 'நான் எழுத்தாளனாகணும்'னு நீங்க ஆசைப்பட்டதை நான் உடனடியாக அங்கீகரிச்சதுக்குக் காரணம் உங்களுக்கு நம்பிக்கை தர வேண்டும் என்பதற்காக

மட்டும் இல்லை. ஆசைப்படுவது எல்லோருக்கும் இயற்கை. ஆனா அதனை அடையணும்னா அதற்கான முயற்சி, பயிற்சி எல்லாவற்றிற்கும் மேலாக அதற்கான உள்இயல்பு வேண்டும். உங்களுக்கு இலக்கியத்திலும் அது சம்பந்தமான பேச்சுக்களிலும் ஈடுபாடு இருந்தது எனக்குத் தெரியும். நீங்க முதல் கலந்துரையாடலின் போது என்னிடம் பேசியது வளவளவென்று நீளமாக இருந்ததாக உணர்ந்து, அடுத்த கட்டங்களில் சுருக்கமாகப் பேசினீங்க. ஆனால் எனக்கு அந்தப் பேச்சுதான் எழுத்தாளனாக நீங்க உயருவீங்க என்று கோடி காட்டியது. உங்க உள்ளம் கவர்ந்த காதலியை நீங்க முதன்முதலாக சந்தித்த ஒரு நிகழ்வைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்த போது கூட உங்களால் சமூகத்தைப் பற்றியும், பொறியியல் கல்லூரிகளில் விரிவுரையாளர்கள் நிரந்தரமாக இருப்பதில்லை என்றால் மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாவதைப் பற்றியும் பேசாமல் இருக்க முடியவில்லை என்று அந்தப் பேச்சுதான் காட்டியது. இப்போது சொல்கிறேன், நீங்க வெறும் சுயநலமான எழுத்தாளனாக இல்லாமல் சமூகப் பொறுப்பு உணர்ந்த எழுத்தாளனாக வருவீங்க; வந்தே ஆகணும். ஆல் த பெஸ்ட்” என்றாள் ஷோபனா உறுதியான குரலில்.

# 11

அலாரம் அலறி எழுப்பிவிட்டது. கம்பளியை விலக்க மனமில்லாமல் விலக்கி நேரம் பார்த்தேன். ஐந்தரை. குஜராத்தின் டிசம்பர் என்பது லேசுப்பட்ட விஷயம் அல்ல.

கடவுளே! இந்தக் குளிரில் இவ்வளவு காலையில் எழுந்து...

‘நாளையில் இருந்து காலை கொஞ்சம் சீக்கிரமா எழுந்திருக்க ஆரம்பிக்கறீங்க’ ஷோபனாவின் குரல் உள்ளிருந்து கேட்டது.

‘எழுந்து?’

‘காலைக் கடன் முடித்து தியானம் பண்றீங்க.’

‘அப்புறம்?’

‘ஒண்ணும் செய்ய வேண்டாம். எழுதணும் எழுதணும்னு நினைச்சிட்டே இருங்க. அது போதும்.’

‘எழுத வேண்டாம்?’

‘வேண்டாம்.’

‘சும்மா உட்கார்ந்து நினைச்சிட்டே இருக்கறதுக்கு ஏதாவது எழுத முயற்சிக்கலாமே’

'வேண்டாம். சும்மா உட்கார்ந்து பொழுதைப் போக்குங்க. பால்கனியில் உட்கார்ந்து சாலையை வேடிக்கை பாருங்க. எண்ணம் மட்டும் எழுதணுமே, எழுதணுமேன்னு சொல்லிட்டே இருக்கட்டும்.'

'எனக்கு ஒண்ணும் புரியலை.'

'புரிய வேண்டாம். சொன்னதை மட்டும் செய்ங்க.'

பால்கனியில் வந்து உட்கார்ந்த போது வானம் வெளுக்கத் தொடங்கி இருந்தது. ஸ்வெட்டர்களிலும் கனத்த கம்பளிகளிலும் தம்மை மூடிக் கொண்ட ஜனங்களின் நடமாட்டம் சாலையில் தெரிந்தது. சில்லென்ற காற்று முகத்தில் அறைந்தது.

சும்மா உட்கார்ந்திருப்பதில் நேரம் வீணாகிறதே என்கிற பதற்றம் மட்டும் உள்ளூர இருந்தது.

எழுதலாமே.... ஷோபனா ஏன் எழுத வேண்டாம் என்றாள் என்று மட்டும் புரியவில்லை.

ஒன்றரை மணி நேரம் அப்படி உட்கார்ந்திருந்து விட்டு எழுந்து சமையல் தொடங்கினேன் - அலுவலகம் போவதற்குத் தயாராவதற்காக.

மாலை ஷோபனாவைப் பார்த்து இன்று எழுந்ததைச் சொன்னேன்.

"வெரி குட். இதையே இன்னும் ஒருவாரம் தொடர்ந்து செய்ங்க" என்றாள்.

நான்கு நாட்களுக்கு மேல் முடியவில்லை. ஐந்தாம் நாள் நானே தாளையும் பேனாவையும் எடுத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தேன்.

அனிச்சையாக வலதுகை தாளின் உச்சிக்குச் சென்றது - பிள்ளையார் சுழி போடும் இடத்தில் 'கே' என்று போடுவதற்கு.

'அந்தப் பழக்கத்தினை அடியோடு விடவேண்டும்.'

கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டேன். தாளும் பேனாவுமாக உட்கார்ந்திருந்தேனே ஒழிய, ஒரு பக்கம் கூட எழுத முடியவில்லை.

என்ன எழுதுவது என்கிற சிந்தனை ஓட்டமே இல்லாமல் இருந்தது. கொஞ்சம் யோசித்துப் பார்க்க, எண்ணத்தின் அந்தப் பகுதியே மொத்தமாக பிளாக் ஆன மாதிரி இருந்தது.

உள்ளூரக் கலக்கமாக இருக்க, விழியின் ஓரத்தில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

'மை காட்! என்ன இது? என்னால் எழுத முடியும்; சோம்பலினால்தான் எழுதாமல் இருக்கிறேன் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தது தவறா? என்னுடைய எழுத்து ஆர்வம் என்கிற கற்பனை ஊற்றின் கண் அடைபட்டுத்

தூர்ந்து போய் வருடக்கணக்காக ஆகிவிட்டதா? அவ்வளவு தானா?

'ஐயோ!'

'மேடம்!'

ஷோபனா சிரித்தாள்.

"அதெப்படி, ஆடின காலும் பாடின வாயும் சும்மா இருக்க முடியும்? மிஸ்டர்! நீங்க பல வருடங்களுக்கு முன்னால் எழுதியபோது உங்களுக்கு இருந்த மொழி அறிவும் ஆழமும் இப்போது இருந்ததை விட நிச்சயம் குறைவாக இருந்தது. இப்போது அந்த அறிவு கூடுதலாக வளர்ந்திருப்பதோடு அனுபவமும் சிந்தனைத் திறனும் கூடப் பக்குவப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய கலவையின் வெளிப்பாட்டுக்கு உங்க கற்பனையைச் சரிவரக் குழைத்துக் கொள்ளும்முன் உங்களை யார் பேனாவைக் கையில் எடுக்கச் சொன்னது?"

அதன்பிறகு அவள் சொன்னவைகளைக் கவனமாகக் கேட்டு அதன்படி நடந்தேன்.

பத்தாம் நாளில் இருந்து எழுதத் தொடங்கினேன். முதல் நாள் ஒரு பக்கம் தான் எழுத முடிந்தது. அதனையே தொடர் பயிற்சியாக்கிக் கொள்ளச் சொன்னாள். தொடர்ந்தேன். மெல்ல மெல்ல எழுத்தின் வேகம் அதிகரித்தது. முதல் சிறுகதையை அடுத்த ஒரு வாரத்தில் எழுதி முடித்தேன். இரண்டு முறை திருத்தி எழுத வேண்டி இருந்தது. சளைக்காமல் திருத்தினேன். முடிவில் படித்துப் பார்க்க நல்ல கதையாகப் பட்டது.

அன்றைய தபாலில் குமுதத்திற்கு அனுப்பி வைத்தேன்.

ஏதோ பெரிய விஷயம் ஒன்றைச் சாதித்துவிட்ட திருப்தி இருந்தது.

"மிஸ்டர்! அதற்குள் புளகாங்கிதம் அடைந்து விடாதீங்க. இப்போதுதான் தட்டுத் தடுமாறி நிமிர்ந்து நின்றிருக்கீங்க. நீங்க ஒலிம்பிக்கில் ஓடவேண்டி இருக்கிறது. பயிற்சியை விட்டுடாதீங்க."

என் எண்ணங்களில், சிந்தனைகளில், அவற்றை ஒழுங்கு செய்வதில் சில டெக்னிக்குகள் சொல்லித் தந்தாள். முந்தைய கௌன்ஸலிங் பொழுதுகளின் போது எந்தச் சந்தர்ப்பங்களில் நான் எப்படி உணர்வேன்; அந்த உணர்வுகளை எப்படிச் செயல் வடிவமாக வெளிக்காட்டுவேன் என்பதை நன்றாக அவள் அறிந்து கொண்டிருந்ததால் என்னைப் பற்றி அவள் சொன்ன பலவிஷயங்கள் எனக்கே வியப்பு அளிக்கும் வண்ணம் புதிதாக இருந்தன.

என்னுடைய எழுத்து தொடர்ந்தது.

சதீஷ்தான் அவ்வப்போது சலித்துக் கொள்வான்.

"நீ அவனைக் கிறுக்கன் ஆக்குகிறாய்" என்று அவளைக் கண்டித்தான்.

என்னிடம் "உனக்கு ஏண்டா இந்த வேண்டாத வேலை எல்லாம்" என்று கேலி செய்தான்.

"இல்லை இது ஒருவகையில் அனைவருக்கும் லாபம் தரும் எக்ஸர்சைஸ்" என்றேன்.

"எப்படி?"

"மேடத்துக்கு ஒரு பேஷண்ட் கிடைச்சாச்சு. அவங்களோட கௌன்ஸலிங் திறமைக்கு இது ஒரு சவால். எனக்கு இதில் தோற்றால் நஷ்டம் ஏதும் இல்லை. ஒரு வேளை ஜெயித்து விட்டால் சிறிய வயதில் நான் ஆசைப் பட்டேனே... நாடறிந்த ஒரு நல்ல எழுத்தாளனாக வேண்டும் என்று. அது நிறைவேறும். இந்த எல்லாம் முடியும் வரை மேடம் வேலைக்குப் போக வேண்டும் என்று உன்னைத் தொந்தரவு செய்யாமல் இருப்பார்கள் என்கிற வகையில் உனக்கும் நிம்மதிதானே?"

"கௌன்ஸலிங் அது இது என்கிறாளே, அந்தச் சமயங்களில் நீ என்ன தான் சொல்லுவாய்? அவள் என்ன சொல்லுவாள்? அதெப்படி பேசியே ஒரு மனிதனின் பிரச்னைகளைத் தீர்க்க முடியும்? அவளிடம் கேட்டால் சொல்ல மாட்டேனென்கிறாள்"

"அது தெரிய வேண்டுமானால் நீயும் அவர்கள் முன்னால் போய் உட்கார்ந்து 'தேவையில்லாத வெட்டி கர்வங்களும் பிடிவாதங்களும் என்னிடம் நிறைய இருக்கு மேடம். அவைகள் என்னை விட்டு ஒழிந்து நான் மனுஷனா ஆகணும்'னு கேட்டுப் பார். ரியலி ஷீ ஹேஸ் பொட்டென்ஷியல்டா" என்றேன்.

கையெடுத்துக் கும்பிட்டான்.

"இந்தப் பைத்தியக்கார விளையாட்டெல்லாம் உன்னளவில் வச்சுக்கோடா சாமி"

மறுமாதமே அந்தச் சிறுகதை குமுதத்தில் பிரசுரமானது.

அந்த இதழை எடுத்துக்கொண்டு மேடத்திடம் ஓடினேன்.

"வெற்றி! வெற்றி! மேடம் நீங்க ஜெயிச்சுட்டீங்க" என்று குழந்தை மாதிரி குதூகலத்தில் குதித்தேன்.

ஷோபனா வழக்கமான அமைதியுடன் ஒரு புன்னகையில் அந்த சந்தோஷத்தினைப் பகிர்ந்து கொண்டாள்.

அன்று இரவு டின்னருக்கு அவர்கள் இருவரையும் 'ஃபன் அண்ட் ஃபுட்' ஓட்டலுக்கு வற்புறுத்தி அழைத்துச் சென்றேன்.

சதீஷ் வாழ்த்துச் சொன்னான்.

"இப்போ ஒத்துக்கிறாயா அவங்க திறமையை?" என்று கேட்டேன்.

"இது நிஜமா அல்லது காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதைன்னு நீ அடிக்கடி சொல்லுவியே அது மாதிரியான்னு எதிர்காலம்தான் சொல்லணும். எனி ஹௌ, இந்த விஷயம் சம்திங் இண்ட்டரஸ்டிங் என்பதை மறுப்பதற்கில்லை" என்று மட்டும் சொன்னான். "ஆபீஸில் சொல்லி ஒரு எழுத்தாளர் உருவாகிறார் என்று பிரபலப்படுத்தி விடலாமா?" என்றான் தொடர்ந்து.

"வேண்டாம்" என்று அவசரமாக மறுத்தேன். "நான் எழுதுவது, நான்கு பேருக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக அல்ல; நீயே கொஞ்சம் முன்னால் சொன்னது மாதிரி நான் நிறையவும் நிறைவாகவும் எழுதுவதை எதிர்காலம் நிரூபிக்கட்டும். என் எழுத்துக்களே என்னை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கட்டும். அதுவரை தயவு செய்து யாரிடமும் இதைப் பற்றிச் சொல்லாதே" என்றேன்.

"தேர் யூ ஆர் பையா! இது ஒரு சிறிய தொடக்கமே. ஒரு சிறுகதையின் பிரசுரம் என்பது உங்கள் தமிழ் இலக்கிய உலகில் ஒண்ணுமே இல்லை என்று நீயே சொல்லி இருக்கிறாய். ஆயிரம் நாவல்கள், ஆயிரம் சிறுகதைகள் எழுதியவர்கள் எல்லாம் அங்கே சாதாரணம் என்றும் சொல்லி இருக்கிறாய். அவர்களின் வரிசையில் உன்னுடைய இடம் எதுங்கறதை நீ தீர்மானிச்சே ஆகணும். போராடியாவது உனக்கொரு நிலையான நிரந்தர இடத்தினை அடைந்தே ஆகணும்"

"போச்சு. எங்க கம்பெனிக்குத்தான் நஷ்டம். ஒரு நல்ல இன்ஜினீயர் வேலையைப் பத்தி யோசிக்காமல் கதையைப் பத்தின நினைப்பிலேயே காணாமல் போகப் போகிறான்" என்றான் சதீஷ்.

"நிச்சயமாய் இல்லை. பையாவின் சிந்தனைக்குள் இப்போது அலுவல் பணி, இலக்கியப் பணி என்கிற இரண்டு கம்பார்ட்மெண்ட்டுகளே உருவாயாச்சு. அவனே நினைச்சாலும் இரண்டையும் ஒண்ணாக்கி குழப்பிக்க முடியாது" என்றாள் ஷோபனா உறுதியான குரலில்.

எனக்குள் ஏதோ வேகம் ஊற்றெடுப்பதை உணர முடிந்தது.

"நிச்சயமாக மேடம். எனக்காக இல்லாவிட்டாலும் உங்களுக்காகவாவது, உங்கள் கௌன்ஸலிங் திறமையால் தமிழில் ஒரு எழுத்தாளரை நீங்க உருவாக்கினீங்கன்னு சரித்திரம் குறிச்சுக்கறதுக்காகவாவது நான் தொடர்ந்து எழுதுவேன்" என்றேன்.

அதனை விடாப்பிடியாகக் கடைப்பிடிக்கவும் செய்தேன். எத்தனையோ கதைகள் திரும்பி வந்தன. சோர்வடையாமல் எழுதினேன். வெளிமாநிலம், புதிய மக்கள், வித்தியாசமான கலாசாரம் என்பதால் நிறைய கதைக் களங்களும் கருக்களும் கிடைத்தன. எழுதுவதற்குக் கொடுத்த அதே முக்கியத்துவத்தை நிறைய படிப்பதற்கும் தந்து இலக்கிய அறிவினைப் புதுப்பித்தபடி இருந்தேன்.

குஜராத்தை மட்டுமின்றி நல்மனம் கொண்ட இந்தியர் எவரையும் உலுக்கி

விட்ட கோத்ரா சம்பவமும் அதனைத் தொடர்ந்த சம்பவங்களும் இந்தக் கால கட்டத்தில்தான் நிகழ்ந்தன. ஒட்டுமொத்த உலகத்தையும் குஜராத்தை நோக்கித் திருப்பிவிட்ட அந்தச் சம்பவங்களின் பாதிப்புகளை அருகில் இருந்து பார்த்த விதத்தில் நாங்கள் மூவருமே மிகுந்த அதிர்ச்சிக்கு ஆளாகி இருந்தோம்.

ஒருவகையில் மெஸானா ஊர் அகமதாபாத்துக்கு வெகு அருகில் இருந்தும் ஓரளவுக்குப் பாதுகாப்பாக இருந்தது. இரண்டு இனத்தாருக்குமே குறிப்பிடத்தக்க பாதிப்புகள் அதிக அளவில் ஏற்பட்டு விடாமல் நீர்த்துப்போய் விடாத பாரம்பரிய ஒற்றுமை உணர்வு காத்திருந்தது.

எங்கள் வீட்டுக்கு அருகில் இருந்த சில கடைகளும் மெயின் பஜாரில் நாங்கள் விரும்பி குளிர்பானம் வாங்கி அருந்தும் ஐஸ்கிரீம் பார்லரும், முக்கிய ஜவுளிக்கடை ஒன்றும் எரிக்கப்பட்டது தவிர, உயிர்ச்சேதம் என்று இல்லாதது ஆறுதலாக இருந்தது.

"இந்த விஷயங்களையும் உன் எழுத்துக்களில் பதிவு செய்யேன் பையா" என்றாள் ஷோபனா ஒருநாள்.

விரக்தியாகச் சிரித்தேன்.

"நிச்சயமாக மேடம். ஆனால் இப்போது அல்ல" என்றேன்.

"ஏன் பையா? இப்போது எழுதினாய் என்றால் கரண்ட் விஷயம் என்று ஒரு பிரபலம் கிடைக்குமே"

"உண்மை. ஆனால் நான் இந்த விஷயத்தை சூட்டோடு சூடாக எழுதி செய்திக் கட்டுரையாக்க விரும்பவில்லை. இந்தச் சூட்டில் உணர்ச்சிகள்தான் மேலோங்கி நிற்கும். இப்போது இவற்றைப் பதிவு செய்வதில் சரித்திரப் பிழை ஏற்பட்டுவிட வாய்ப்பு இருக்கிறது. இந்தப் பரபரப்பும், சூடும் ஆறிய பிறகு ஆழ்ந்து களப்பணி செய்து தகவல்கள் திரட்டி இப்போது திரண்டிருக்கும் செய்திகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தோம் என்றால் நிறைய வித்தியாசங்கள் இருப்பது தெரியவரும். ஓரிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு விடுப்பு எடுத்துக் கொண்டாவது பாதிக்கப்பட்டவர்களோடு கூட இருந்து விஷயம் திரட்டி மிகை களைந்து உண்மையின் சாரம் கெட்டுவிடாமல் எழுத வேண்டும். நிச்சயம் எழுதுவேன் மேடம்" என்றேன். என் முகம் தீவிரமான கவலையில் இருப்பது எனக்கே தெரிந்தது.

என்னைப் பெருமையாகப் பார்த்தாள் ஷோபனா.

"நீ வெறும் பிரபலத்துக்காக எழுதவில்லை; உனக்குள் ஒரு சமூகப் பொறுப்புணர்வு இருக்கிறது என்கிற விஷயம் எனக்கு சந்தோஷம் அளிக்கிறது பையா. நான் ஒரு நல்ல மனிதனுடன் பழகி இருக்கிறேன் என்பது பெருமையாக இருக்கிறது" என்றாள்.

"ஏற்கெனவே பூஜ் போகும் திட்டமும் உனக்கு இருந்ததே" என்று

மாலைமதி 02.06.2003

நினைவுபடுத்தினாள்.

"ஆமாம் மேடம். பூகம்பத்துக்குப் பிறகு அந்த மக்கள் என்ன ஆனார்கள், எவ்வளவு தூரம் மீண்டிருக்கிறார்கள், எந்த அளவுக்கு அவர்களுடைய குடும்பச் சூழலும் சமூகச் சூழலும் மாறுதலுக்கு உள்ளாகி இருக்கின்றன என்கிற விஷயங்களைக் குறித்த முதற்கட்ட ஆய்வுக்கு அடுத்த மாதத்தில் போகலாம் என்றிருக்கிறேன். எப்படியும் இப்போதைய சூழலில் இங்கே தேர்தல் சீக்கிரம் வந்துவிடும். மீண்டும் அந்தப் பகுதியில் ஒரு விளம்பர வெளிச்சம் வரும். அந்தக் கூத்துகள் எல்லாம் முடியட்டும். மீண்டும் அந்தப் பகுதி யதார்த்த இருளுக்குள் திரும்பட்டும். அதன் பிறகு போக இருக்கிறேன்."

அதேநேரம் என்னுடைய முதல் பணியான கம்பெனி வேலைகளிலும் கவனம் சிதையாமல் பார்த்துக்கொள்ள முடிந்தது என்னால். முன்பெல்லாம் இதைவிட குறைவாக வேலைப்பளு இருந்த நாட்களில் கூட மற்ற வகையான படிப்பு, எழுத்து முதலான விஷயங்களுக்கு நேரமில்லை என்று நினைத்துக்கொண்டிருந்தேன். என்னுடைய நேர அட்டவணைகளில் இருந்தே நேரம் எடுத்துக்காட்ட ஒரு ஷோபனாவின் தேவை இருந்தது.

எழுத்துக்களின் பிரசுரங்கள் அதிகரித்து ஊக்கம் அளித்தன.

மொழி புரியாவிட்டாலும் ஷோபனா என் கதைகளின் கருவையும் நடையையும் அவ்வப்போது கேட்டு விமர்சனங்கள் தந்தபடி இருந்தாள். இன்னும் அழுத்தமான கருவைக் கொண்டு எழுது பையா என்று ஊக்கினாள்.

கடந்த மூன்று வருடங்களில் சுமார் எழுபத்தைந்து கதைகள் முக்கிய பத்திரிகைகளில் பிரசுரமானதும் அவற்றில் மூன்று இலக்கியச் சிந்தனையின் மாதாந்திர சிறந்த சிறுகதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், வேறு சில இலக்கிய அமைப்புகள் இன்னும் நான்கு கதைகளைச் சிறந்த கதைகளாக அறிவித்ததும் எனக்குள் உற்சாகத்தையும் வேகத்தையும் தந்தபடி இருந்தன.

அந்தவேகம்தான் சிறுகதைத் தொகுப்பு ஒன்று போட்டால் என்ன என்கிற ஆர்வத்தைத் தர, நல்ல கதைகள் என்று நான் தேர்ந்தெடுத்த இருபது கதைகளை செல்வி பதிப்பகத்திற்கு அனுப்பி வைத்திருந்தேன். இப்போது அவையும் புத்தக வடிவம் தாங்கப் போகின்றன என்கிற செய்தி கற்பனையில் இருந்து நிஜமாகி இருப்பதை என் மேஜையின் மீது படபடக்கும் அச்சுக் காகிதங்கள் தினசரி சொல்லிய வண்ணம் இருக்கின்றனவே!

## 12

ஒரு வாரப் பயணமாக மட்டுமே சென்னைக்குப் போன சதீஷும், ஷோபனாவும் ஒன்பதாம் நாள் அங்கிருந்து தொலைபேசியில் தொடர்பு

கொண்டு மறுநாள் தாங்கள் வருவதாகக் கூறியது எனக்கு வியப்பாக இருந்தது.

"என்னப்பா, சென்னை உனக்கு ரொம்பவும் பிடிச்சுப் போச்சா? தமிழ்நாடு உன்னை விடமாட்டேங்குதா?" என்றேன், கிண்டலையும், அவன் சொன்ன நாளில் வராததால் எனக்குள் ஏற்பட்டிருந்த சலிப்பையும் கலந்து.

"சாரிடா, இவள் என்னைப் பாடாய்ப்படுத்தி இங்கே பல ஊர்களுக்கும் சுற்ற வைத்து விட்டாள். ஆனா, சந்தோஷமான டிரிப் என்பதைச் சொல்லியே ஆக வேண்டும். இங்கே வந்ததில் எனக்குள்ளும் ஒரு முக்கிய மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஷோபனாவை வேலைக்கு அனுப்பலாம் என்று முடிவு செய்து விட்டேன். நீ அந்தப் பள்ளியில் தொடர்புகொண்டு இன்னும் அந்த கௌன்ஸலர் போஸ்ட் காலியாக இருக்கிறதா என்று விசாரித்து வை" என்றான் சதீஷ்.

எனக்கு ஏதும் புரியவில்லை. இது எப்பேர்ப்பட்ட ஒரு மனமாற்றம்! தமிழ்நாட்டில் அப்படி என்ன நிகழ்ந்தது இவனுக்குள், இப்படி ஒரு மாற்றத் தினை உண்டாக்கும்விதமாக!

ஆனால், அதற்கு மேல் அவன் ஏதும் சொல்லவில்லை. நாளை நேரில் வந்து சொல்கிறேன் என்று சொல்லி போனை வைத்துவிட்டான்.

மறுநாள் விடுப்பு எடுத்துக்கொண்டு நானே விமான நிலையத்திற்குச் சென்றிருந்தேன், அவர்களை வரவேற்க.

சதீஷ் வழக்கமான உற்சாகத்துடன் இருந்தாலும் ஷோபனாவிடம் ஏதோ ஒருவித வாட்டம் தெரிந்தது. வழியெங்கும் ஒருவித இறுக்கமான அமைதி.

பயணக் களைப்பா? வேறு ஏதும் பிரச்னையா?

"மேடம்! அங்கே போய் சதீஷுக்கு என்ன மந்திரம் போட்டீங்க? நீங்க வேலைக்குப் போக ஒத்துக்கிட்டான் போல... நீங்க ரொம்ப லக்கி மேடம். அந்த ஸ்கூலில் இதுவரைக்கும் கௌன்ஸலரா இருந்த லேடி சரியில்லைன்னு போன மாசம்தான் விலக்கினாங்களாம். ஸோ, உங்களுக்குத்தான் அந்தப் போஸ்ட்." என்றேன்.

"ஓ! ரொம்ப நன்றி பையா" என்றாள் சாதாரணமான குரலில்.

"மேடம், என்னாச்சு? சென்னை உங்களுக்கு ஒத்துக்கலையா? உடம்பு சௌக்ரியமா இருக்கா, இல்லையா? ஏன் டல்லா இருக்கீங்க?" என்று கேட்டபோது, வலிய வரவழைத்துக்கொண்ட புன்னகையுடன் "அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை பையா" என்றாள்.

அந்தப் புன்னகையில் ஜீவன் இல்லாத மாதிரி தோன்றியது.

சம்திங் ராங்!

சதீஷின் வீட்டில் போய்ச் சாமான்களை இறக்கி வைத்துவிட்டு, "குளித்து ஃப்ரஷ் ஆகிக் கொள்ளுங்கள். பத்து நாள் பூட்டிக் கிடந்த வீடு. நாளை வேலைக்காரி வந்த பிறகு சுத்தம் செய்து கொள்ளலாம். இன்றைக்கு என்

வீட்டில் நம் மூவருக்கும் டிபன் தயார்செய்து விடுகிறேன். வந்து விடுங்கள்" என்று கூறி விட்டுக் கிளம்பினேன்.

ஷோபனாவுக்கு நான் செய்யும் மசால் தோசையும் சாம்பாரும் மிகவும் பிடிக்கும். அதற்குத் தேவையான காயகறிகள் எல்லாம் வரும் வழியிலேயே வாங்கிக் கொண்டேன். வீடு வந்து மளமளவென்று எல்லாம் தயார் செயதேன். அவர்கள் வரும் முன் எல்லாம் தயார்செய்து விட்டால் நிதானமாகப் பேசிக்கொண்டிருக்கலாமே!

அடுத்த ஒன்றரை மணி நேரத்தில் அவர்கள் வந்துவிட்டார்கள்.

குளித்ததனால் ஏற்பட்டிருந்த தெளிவோ என்னவோ, இப்போது அவர்கள் இருவரின் முகங்களிலுமே புன்னகை விரிந்திருந்தது.

"மசாலா வாசனை வாசல் வரைக்கும் தூக்குது." என்று சிரித்தாள் ஷோபனா.

"பையா! உங்க தமிழ்நாட்டு ஓட்டல்கள்லயும் மசாலா தோசா சாப்பிட்டுப் பார்த்தேன். நீ வைக்கிற மாதிரி டேஸ்ட்டா இல்லையே" என்றாள்.

"காம்ப்ளிமெண்ட்டுக்கு நன்றி" என்றேன்.

சோபாக்களில் அழுந்தினார்கள். எதிரே மைய மேஜையில் இருந்த என் சிறுகதைத் தொகுப்பின் ப்ரூஃப் பிரதியைப் பார்த்த ஷோபனா கேட்டாள்: "என்னாச்சு? இதனை இன்னும் நீ அனுப்பலியா?"

"நாளைக்குத்தான் அனுப்பணும். யோசிச்சு யோசிச்சு முன்னுரை எழுதறதிலயே மூணு நாள் ஓடிப் போச்சு. அப்புறம் அலுவலக வேலை பிஸியில் இரண்டு நாட்கள் தொடவே முடியலை" என்றேன்.

அவள் கையில் எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அதன் முதல் பக்கத்தைப் பாருங்கள்" என்றேன்.

முகத்தில் கேள்விக்குறியுடன் பிரித்தாள்.

'சமர்ப்பணம்

ஷோபனாவுக்கு'

என்று தமிழிலும் கொஞ்சம் கீழே ஆங்கிலத்திலும் எழுதியிருந்தேன்.

அதனைப் பார்த்துவிட்டு புன்னகையுடன் நிமிர்ந்தாள்.

"ஆங்கிலத்தில் எழுதி இருப்பதுதான் தமிழிலும் இருக்கிறதா?" என்று மட்டும் கேட்டாள்.

"ஆமாம். ஆங்கிலத்தில் போட்டதே நீங்கள் படித்துக்கொள்வதோடு உங்கள் வட்டத்தில் அனைவருக்கும் உங்களுடைய சாதனை இது என்று மனதாரப் பெருமைப்பட்டுக் கொள்வதற்காகவும்தான்" என்றேன்.

அவளும் சதீஷும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

ஷோபனா நிதானமாகத் தன் கைப்பையைத் திறந்து பேனா எடுத்தாள்.

நான் எழுதி இருந்ததில் ஷோபனாவுக்கு என்கிற வார்த்தையினை அடித்துவிட்டு 'ரத்னாவுக்கு' என்ற ஆங்கிலத்தில் எழுதினாள். "தமிழில் இதனை எழுதிக் கொள்" என்றபடி என்னிடம் நீட்டினாள்.

என் முகம் கறுத்தது.

"மேடம்!" என்றேன் திணறலாக.

"பையா! எனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. நாங்கள் திண்டிவனத்துக்கும் போனோம். காரைக்காலுக்கும் போனோம்" என்றாள்.

உறைந்து போனேன்.

அந்த அமைதி நீண்ட நேரம் நீடித்தது.

மூவருக்குமே எக்கச்சக்கமான நிலைமை. என்னைப் புண்படுத்தி விட்டோமோ என்று அவர்களும், ஷோபனாவை ஏமாற்றிவிட்டேனோ, அதனால் அவர்கள் இருவருமே புண்பட்டுவிட்டார்களோ என்று நானும் உள்ளுக்குள் புழுங்கிக்கொண்டிருந்ததால் மூவருமே மௌனத்தினை அடைகாத்துக் கொண்டிருந்தோம்.

வார்த்தைக் குஞ்சுகளைப் பொரித்து முதலில் வெளியிட்டாள் ஷோபனா.

"நீ போன மூன்று வருஷங்களா விவரித்திருந்த வார்த்தைகளால் ஏற்பட்ட உந்துதல்தான் எனக்குள் உன் காவ்யாவைக் காணும் ஆவலை அதிகப்படுத்தியது. திருவண்ணாமலை என்கிற ஸ்தலத்திற்குப் போகும் வழியில் தான் திண்டிவனம் என்று தெரிந்தபோது சும்மாவாச்சும் அந்தக் கல்லூரி பற்றித் தெரிந்து கொள்வது போன்ற சாக்கில் போய்ப் பார்த்துவிட்டு வரலாமே என்று இவரைத் தூண்டிவிட்டு அங்கே அழைத்துப் போனேன். சும்மா சொல்லக்கூடாது, உன்னை அங்குள்ளோர் இன்னும் நன்றாக நினைவு வைத்துள்ளார்கள். பிரின்ஸிபாலும், உங்கள் துறைத் தலைவரும் உன்னை ரொம்பவும் புகழ்ந்தார்கள். உன்னுடைய நண்பர்கள் என்று அறிந்த மாத்திரத்தில் எங்களுக்கு ராஜ உபசாரம் செய்தார்கள். விடுமுறைக்கு நீ தமிழ்நாடு போனால், அந்தக் கல்லூரிக்குப் போவதே இல்லையாமே. உன்னை வரச் சொன்னார்கள்."

அவள் பேசப் பேச அவஸ்தையாக நெளிந்தேன்.

"அப்புறம் மெல்ல விசாரித்தேன், காவ்யா பற்றி. அப்போதுதான் தெரிந்தது. அப்படி யாரும் அங்கே பணியாற்றியதே இல்லை என்று. நீதான் பெயர் மாற்றி ஏதும் சொல்லிவிட்டாயோ என்கிற குழப்பத்தில் வேறு மாதிரி விசாரித்த போது தெரிந்தது, நீ அங்கே பணியாற்றிய காலத்தில் அங்கே பெண் விரிவுரையாளர்களே கிடையாது என்று"

கைகளைப் பிசைந்துகொண்டேன். ஷோபனாவையோ, சதீஷையோ நேர்ப்பார்வை பார்க்க இயலாமல் வேறு எங்கோ வெறித்தேன்.

"இந்த முறை உன்னுடைய திருமணம் குறித்துப் பேசுவதற்காகவாவது எப்படியும் உன் வீட்டுக்கு ஒரு முறை போக வேண்டும் என்கிற ஆர்வம் சதீஷுக்கு இருந்தது. அவருக்கு நீ என்னிடம் புளுகி வைத்திருந்த காதல் கதை

தெரியாதல்லவா? நான் எனக்குத் தெரிந்த மாதிரியும் காட்டிக்கொள்ள முடியாத சூழல். என்னுடைய கௌன்ஸலிங் எத்திக்ஸ் அப்படி ஆகவே அவரிடம் ஏதும் சொல்லாமல் நானும் உடன் சென்றேன். அங்கேதான் உன் நிஜமான காவ்யாவான ரத்னாவைப் பார்த்தேன்."

சதீஷ் இப்போதுதான் பேச ஆரம்பித்தான்.

"உன் அப்பா - அம்மாவிடம் உன் திருமணம் பற்றிப் பேச முற்பட்ட போது அவர்கள் சொன்ன விஷயம் முதலில் எனக்குப் புரியவே இல்லை. உன் வீட்டிலேயே வளரும் முறைப்பெண்ணான ரத்னாதான் உனக்கு மனைவி என்பது சிறு வயதிலேயே முடிவான விஷயமாமே! உனக்கும் அவள் மீது கொள்ளை ஆசையாம். யாரோ ஜோசியக்காரன் சொன்னதுனால முதல்ல டிலே ஆகியிருந்த உங்க திருமணம் மூன்று வருடங்களுக்கு முன்பு கிட்டத்தட்ட ஏற்பாடாக இருந்ததாம். நீதான் திடீரென்று ஒரு முக்கியமான நல்ல காரியத்துக்காக திருமணத்தினைத் தள்ளிப் போட வேண்டும் என்ற சொல்லி நிறுத்தி விட்டாயாம். காரணத்தையும் சொல்லவில்லையாம். ரத்னாவிடம் மட்டும சொல்லி இருந்தாயாம். அவளும் அதில் கன்வின்ஸ் ஆனதால் பெரியவர்களிடம் அவளே தி பார்த்து சரி சொல்லும் வரை காத்திருப்பதாகச் சொல்லிவிட்டாளாம். இவ்வளவையும் உங்க வீட்டில் சொன்ன போது எனக்கு ஏதும் புரியவில்லை. அப்புறம் ஷோபனாவும் ரத்னாவும் தனியாகப் போய் ஒரு மணி நேரத்துக்கும் மேலாகப் பேசிவிட்டு வந்தார்கள். அதில் தான் ஷோபனாவுக்கு விஷயம் எல்லாம் விளங்கி இருக்கிறது. அன்று இரவு என்னிடம் உன் காதல் கதை கௌன்ஸலிங் எல்லாம் விலாவாரியாகச் சொன்னாள். உண்மையில் ஷோபனா உனக்கு உளவியல் சிகிச்சை அளிக்கவில்லை; நீதான் அவளுக்கு அளித்திருக்கிறாய் என்று தெரிய வந்த போது என் நண்பன் என்கிற முறையில் உன்னை நினைத்துப் பெருமைப்படுவதா, முட்டாள் என்று திட்டுவதா என்று புரியவில்லை. நீயாவது எங்களுடன் பழகியவன்; அந்தப் பெண் ரத்னா! எங்களை முன்பின் பார்த்தே இராதவள், உன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு எங்களுக்காக...." வார்த்தைகள் வராமல் தடுமாறினான் சதீஷ்.

மெல்ல நிமிர்ந்து ஷோபனாவைப் பார்த்தேன்.

அவளுடைய கண்களில் இருந்து நீர் கொட்டத் தொடங்கி இருந்தது.

"பையா! எனக்காக ஏன் இப்படி ஒரு பொய்யான காதல் கதையை நிஜம் போல் சொன்னாய்? எதற்காகத் திருமணத்திற்குத் தயாராகிக் கனவுகளில் இருந்த ரத்னாவைக் காத்திருக்க வைத்துக் கொடுமைப்படுத்தினாய்? எவ்வளவு காலத்திற்கு இப்படி பிரம்மச்சாரியாக இருக்க உத்தேசித்திருந்தாய்?"

"நல்லதற்காகப் பொய் சொல்லலாம் மேடம். உங்களுக்குள் கனன்று கொண்டிருந்த வேலை ஆர்வத்திற்குத் தீனி போடுவதற்காகத்தான் அப்படி ஒரு பொய்க் காதல் கதையை சிருஷ்டித்தேன். உங்கள் ஆர்வத்தைச் சரியான வழியில் கையாளாமல் சதீஷ் அலட்சியமாக ஒதுக்குவது உங்களுக்குள் ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்திவிடக்கூடாதே என்பதற்காகத்தான் இப்படி ஒரு பொய்யைச்


சொன்னேன்."

"அதற்காகக் காதல் கதை ஏன்?"

"மேடம், உங்களுடைய டிரீட்மெண்ட்டுக்கு என்னை உள்ளாக்கிக் கொள்வது என்று நான் தீர்மானித்துவிட்ட பிறகு, எந்தப் பிரச்னையைச் சொல்வது என்று யோசித்தேன். எனக்கு நன்றாகத் தெரியும், நான் கதை எழுதுவதில் ஒன்றும் ஜாம்பவான் கிடையாது என்று. என்னுடைய கதைகள் அப்போது பிரசுரமாவது குறைந்து போனதற்குக் காரணம் கதைகளில் அழுத்தம் இல்லாமல் இருந்ததும், அதனைச் சரி செய்துகொள்ள நான் முயற்சி எடுக்காததும்தான். அதை மட்டும் சொன்னால் என்னுடைய சோம்பல் போவதற்குத் தாங்கள் டிப்ஸ் கொடுப்பீர்கள். அது உங்களுக்கு சேலன்ஜிங்கான கேஸாக இருக்காதே... ஒரு பெண்ணின் மீது அழுத்தமான காதல் கொண்டு தோல்வி அடைந்து அதன் விரக்தியில் எழுதுவதை நிறுத்திவிட்டவனைச் சரி செய்து அவளை மறக்க வைத்து மீண்டும் எழுத வைப்பதுதான் உங்களுக்கு நான் கொடுத்த கற்பனை சவால்."

"ஐ.ஸீ."

"அன்னிக்கு உங்க வீட்டில் ஆனந்த் படம் பார்த்துக் கொண்டிருந்தோமே... அப்போதுதான் எனக்குள் இப்படி ஒரு கதை தோன்றியது. முதலில் உங்களிடம் பொய் சொல்கிறோம் என்கிற குற்ற உணர்வு உறுத்தாமல் இல்லை. என்னுடைய ஆரம்ப வாக்கியங்கள் மிகவும் திணறித் திணறி வெளிப்பட்டதற்கு அதுதான் காரணம். என்னை உங்கள் அண்ணனுடைய மறுபிறவியாகக் கண்டதாகச் சொன்னீர்கள். இந்த ஊரின் வாழ்க்கை உங்க அண்ணன் அருகில் இருக்கும் மனதைரியத்தைக் கொடுப்பதாகச் சொன்னீர்கள். அப்படிப்பட்ட தங்கைக்காக நான் இதுகூட செய்யக்கூடாதா? உங்களுக்குள் 'ஒரு கேஸ் டீல் பண்ண அனுமதிக்கப்பட்டோம். அதில் வெற்றியும் காணுகிறோம்' என்கிற ப்ரொஃபஷனல் திருப்தியை ஏற்படுத்தவே அவ்வாறு செய்தேன். அது முழுமையாக வேண்டும் என்பதற்காக என்னுடைய காதல் நாடகத்தினை முன்னிறுத்த வேண்டி இருந்தது. ஸோ, திருமணம் தள்ளிப்போக வேண்டியது அவசியமான ஒன்றாகி விட்டது. ஆனால், அதிலும் நன்மைதானே விளைந்தது? நீங்கள் கொடுத்த ஊக்கத்தினால் நான் எழுத்தாளனானதும், இப்போது என் சிறுகதைத் தொகுப்பு வெளியாகப் போவதும் பொய்யில்லையே. நீங்கள் மட்டும் இப்படி திண்டிவனத்துக்கும் காரைக்காலுக்கும் போய் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ளாமல் இருந்திருந்தால் இந்தப் புத்தகம் வெளியானதும் நானாகவே உங்களிடம் என் திருமணம் பற்றிப் பேசி உங்களுடைய அறிவுரையின் பேரில் செய்துகொள்வது போல் ரத்னாவை மணந்து கொண்டு வந்து உங்கள் முன் நின்று காவ்யா நாடகத்தினையே சுபமாகக் காற்றில் கரைய விட்டிருப்பேன். அது நீங்கள், நான், ரத்னா ஆகிய மூவருக்கு மட்டுமே தெரிந்த விஷயமாக மறைந்திருக்கும். உங்களுடைய கௌன்ஸலிங் திறமையின் வெற்றி குறித்த சந்தோஷம் மட்டும் தங்களுக்கு நிரந்தரமாக நிலைத்திருக்கும். உங்களை யார். எங்க வீட்டுக்கும் அந்த காலேஜுக்கும் போகச் சொன்னது? இப்போ பாருங்க. உங்க முன்னால ஒரு பொய்யனாக நிற்க வச்சுட்டீங்களே... ஆனா




அட்டையில்:
மீரா வாசுதேவன்,
படம்:
சங்கர் . சத்தியமூர்த்தி

ஒரு விஷயம் நிச்சயம் மேடம், உங்களை ஏமாற்றுவதோ, அவமானப்படுத்துவதோ என்னுடைய நோக்கம் இல்லை" என்று தலையில் அடித்துக்கொண்டு விரக்தியாகச் சிரித்தேன்.

"இல்லை பையா! இதுகூடப் புரிந்து கொள்ள வில்லை என்றால் நான் படித்ததற்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும். உன்னைப் பொய்யனாக நாங்க நினைக்கவில்லை. என்னிடம் பொய்யான கதையை நீ சொன்ன போது அப்படிப்பட்ட நிலையில் இருந்து நீ மீண்டாலே எழுத ஆரம்பித்து விட முடியும் என்கிற கோணத்தில் நான் டிப்ஸ் கொடுத்துக் கொண்டிருக்க, என்னுடைய வெற்றிக்காக உன்னுடைய பங்காகவும் உழைத்தாயே! நிறைய படித்து எழுதிப் பயிற்சி செய்தாயே... என்னுடைய சந்தோஷத்துக்காக எந்த ஒரு தியாகத்தையும் செய்யத் தயாராகிற சகோதரனாகவும், உன் வார்த்தைக்காக அந்தத் தியாகத்தில் தன்னையும் கரைத்துக் கொள்கிற ஓர் உயிர்த் தோழியாகவும் தான் நீயும் ரத்னாவும் எங்களுக்குத் தோன்றுகிறீர்கள்"

"ஆமாண்டா, அந்தத் தியாகம்தான் இவளை வேலைக்கு அனுப்பலாம் என்கிற எண்ணத்தையே எனக்கு உண்டாக்கியது. அதோடு இதே துறையில் இவள் உயர் படிப்பு ஏதும் படிப்பதாக இருந்தால் அதற்கு முழு ஆதரவும் தந்து ஊக்குவிக்க வேண்டும் என்கிற முடிவினையும் என்னுள் விதைத்துள்ளது" என்றான் சதீஷ்.

"பையா! நீ இப்போ முதல் வேலையா காரைக்காலுக்கு போன் போடற. அடுத்த முகூர்த்தத்தில் உனக்கும் ரத்னாவுக்கும் திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய அம்மாவிடம் சொல்ற" என்றாள் ஷோபனா ரிஸீவரைக் கையில் எடுத்தபடியே.

"கௌன்ஸலர் சொன்னா கௌன்ஸல் செஞ்சுதானே ஆகணும்?" என்று சிரித்தபடியே போனை வாங்கினேன். அம்மா, அப்பா, ரத்னா மூவரிடமும் நிறைவாகப் பேசினேன். காரைக்காலின் சந்தோஷம் இங்கே வரை பிரதிபலித்தது.

மனங்கள் தெளிந்ததும் வயிறுகள் தங்கள் இருப்பினை நினைவுபடுத்த தோசை சுட ஆரம்பித்தேன்.

**(முற்றும்)**

அச்சிட்டவர் : பி. வரதராசன். பதிப்பாளர் : பி.வி. பார்த்தசாரதி. குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், 151, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: பி.வி. பார்த்தசாரதி.

கதையில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.